# சேவா வாணி



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்

தமிழ்நாடு - தெற்கு

ஏப்ரல் 2023

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)


என் அன்பிற்குரியவர்களே!

உயரிய எண்ணங்கள் மற்றும் உயரிய இலட்சியங்களால் உங்கள் மூளையை நிரப்புங்கள். இரவும் பகலும், அத்தகைய உயரிய எண்ணங்களையே உங்கள் முன் நிறுத்துங்கள். அவற்றிலிருந்துதான் சிறந்த செயல்கள் வெளிப்படும். மன அழுக்கைப் பற்றி பேசுவதற்கு பதிலாக, நாம் தூய்மையானவர்கள் என்று கூறிக் கொள்ளுங்கள். நம்மைப் பற்றி நாமே குறைவாக நினைத்துக் கொண்டு, நாம் பிறந்தோம், நாம் இறக்கப் போகிறோம் என்ற பயத்துடன் கூடிய ஒரு மாயையில் சிக்கியுள்ளோம்.

என் அன்பிற்குரியவர்களே! உங்கள் சாய் உங்களுடன், உங்களுள், மற்றும் உங்களைச் சுற்றியும் இருக்கிறேன். பயம் வேண்டாம். மகிழ்ச்சியாக இருங்கள்.

அன்புடனும், அருளுடனும்,

– பாபா



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்,தமிழ்நாடு தெற்கில் இருந்து 3 பிரிவுகளிலும் மொத்தம் 108 தனித்துவமான செயல்பாடுகள் ஏப்ரல் 2023 நடந்தன

## கல்வி பிரிவு

4

## சேவை பிரிவு

61

## ஆன்மீகப் பிரிவு

43

## காஞ்சிபுரம் வடக்கு

# ஸ்ரீ சத்ய சாயி ஆராதனை மஹோத்ஸவம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 10 | 600 |

05.03.2023

பகவானின் அருளால் ஸ்ரீ சத்ய சாயி ஆராதனை மஹோத்ஸவம் சிட்லபாக்கம் சமிதியில் இரண்டு நாள் விழாவாக பக்தியுடன் கொண்டாடப்பட்டது. உத்ஸவத்தின் பூர்வாங்கமாக கிண்டி ஷிர்டி பாபா கோவிலில், **23** ஏப்ரல் **2023** அன்று**,** சிறப்பு நிகழ்ச்சிகளாக " நீர் மோர் விநியோகம்" **( 600** பயனாளிகள்**)** , பாலவிகாஸ் பிள்ளைகள் மற்றும் அவர்களின் தாய் தந்தையர்களுக்கான ஆன்மீகப் பயணம் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தேறியது. அப்போது சாயி பஞ்சரத்ன க்ருதியில் ஒன்றை ஒட்டிய "சதா பாவயாமி" என்ற நாடகம் மற்றும் நாட்டியம் உள்ளிட்ட "பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி" நடை பெற்றது. சமிதி அங்கத்தினர்களின் சிறப்பு சாயி பஜனையுடன் அன்றைய நிகழ்ச்சிகள் பகவான் அருளால் இனிதே நிறைவடைந்தன. ஆராதனை தினத்தன்று **(24** ஏப்ரல் **2023),** சிட்லபாக்கம் சமிதியால் தத்து எடுக்கப்பட்ட கிராமம் ஹரிதாஸ் புரத்தில் சிறப்பு நாராயண சேவை நடைபெற்றது. சமிதியில் சிறப்பு சாயி பஜனையுடன் சிட்லபாக்கம் சமிதியின் ஸ்ரீ சத்ய சாயி ஆராதனை மஹோத்சவம் இனிதே நிறைவடைந்தது.





## காஞ்சிபுரம் வடக்கு

# நீர் மோர் விநியோக சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை 5600

பகவானின் அருளால் மாடம்பாக்கம் சமிதியில் ஏப்ரல் 14 முதல் மே 31தேதி வரை நீர் மோர் விநியோகம் சேவை இரண்டு இடங்களில் சமிதியின் அருகே நடந்து வருகிறது. இதன் மூலம் தினமும் 350 பேர்கள் பயன்பெறுகிறார்கள். இதுவரை தோராயமாக 5600 மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதில் தினமும் மகிளாஸ் மூவர் மற்றும் ஆடவர் 7 பேர் தொடர்ந்து சேவை செய்து வருகிறார்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை எடுத்துக்காட்டும் விதமாக இந்த சேவை பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது .இந்த பணி கடந்த 10 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து நடை பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





காஞ்சிபுரம் வடக்கு

# மகளிருக்கான சுயதொழில் பயிற்சி

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை"

"பயனடைந்தோர் எண்ணிக்கை 40"

பகவானின் பெருங்கருணையால் காஞ்சி வடக்கு மாவட்டம் நன்மங்கலம் சமிதி மற்றும் நெமிலிச்சேரி சமிதி சார்பில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதமாக மகளிருக்காக தொழில் பயிற்சி வகுப்புக்கள் ( சோப்பு , சாம்பிராணி , நெய் தீபம் , பஞ்சகவ்யதீபம் தயாரித்தல், மெத்தை மற்றும் மிதியடி ஆகியவை ), மாவட்டத்தைச் சேர்ந்த சாய்சேவகி அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டது. இல்லத்தரசிகள் , கல்லூரி மாணவிகள், பாலவிகாஸ் அன்னையர்கள் என 40 மகளிர் பங்கேற்றனர் . பங்குகொண்டது மட்டுமில்லாமல், அவர்கள் வீட்டில் ஆர்வத்துடன் தயாரித்த பொருட்களின் புகைப்படங்களையும், அனுபவங்களையும் சமிதி அன்பர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.





காஞ்சிபுரம் வடக்கு

# நீலகண்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
2000

பல்லாவரம் சமிதியின் சார்பில் பழைய பல்லாவரம் நீலகண்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு நம் சேவாதளத் தொண்டர்கள் சேவை செய்தனர். முன்னதாகவே அறிவித்ததன் படி **27/04/2023,** வியாழக்கிழமை அன்று பல்லாவரம் சமிதி உறுப்பினர்களுக்கு உதவி செய்யும் விதமாய் பல்வேறு சமிதிகளில் இருந்து காலை **6** மணி அளவிலிருந்து **10** மணி வரை கலந்து கொண்டு, பக்தர்கள் வந்த வரிசையில் செல்ல வழி நடத்தி, கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வழிவகைச் செய்தனர்.

ஸ்ரீ சத்ய சாயி சேவாதளத் தொண்டர்களின் அயராத சேவையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்த கோவில் நிர்வாகிகள் தொண்டர்களை கௌரவித்தனர். அதுமட்டும் இல்லாமல், மாதம் ஒரு முறை அந்த திருக்கோவிலில் சாயி பஜனை செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். **24** தொண்டர்கள் இத்திருப்பணியில் கலந்து கொண்டனர்.



# காஞ்சிபுரம் வடக்கு

## ஸ்ரீ சத்ய சாயி ஆராதனை மஹோத்ஸவம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 20 |

பகவானின் அருளால் ஸ்ரீ சத்ய சாயி ஆராதனை மஹோத்ஸவம் மீனம்பாக்கம் சமிதியில் பக்தியுடன் கொண்டாடப்பட்டது. வாராந்திர கிராமிய பால விகாஸ் வகுப்புகளின் ஒரு பகுதியாகவும், ஈஸ்வரம்மா தின விழாவையும் முன்னிட்டும், ஏப்ரல் 16 ஆம் தேதி பர்மா தமிழர் காலனியிலும், ஏப்ரல் 23 ஆம் தேதி பி.வி.நகர் முத்தமிழ் தெருவிலும் மாத்ரு பூஜை கிராம பி.வி மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது. பர்மா தமிழர் காலனியில் மாத்ரு பூஜையை 14 குழந்தைகள் 7 பெற்றோர்களுக்கு செய்தனர். ஏப்ரல் 23 அன்று 6 குழந்தைகள் 3 பெற்றோருக்கு பூஜை செய்தனர் மேலும், பேரிடர்களின் வகைகள் மற்றும் அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பெற்றோர்கள் மற்றும் பிற முதியோர்களுக்குப் பேரிடர் மேலாண்மை விளக்கம் அளிக்கப்பட்டது. கூடுதலாக, சுயநினைவற்ற நபருக்கான முதலுதவி டெமோ மற்றும் சுவாசத்தைக் கண்டறியும் முறைகளும் கற்பிக்கப்பட்டனஆராதனை தினத்தன்று (24 ஏப்ரல் 2023), மீனம்பாக்கம் சமிதியில் சிறப்பு சாயி பஜனை நடைபெற்றது.



# பகவானின் ஆராதனை விழா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
300

பகவானின் அருளால் மாடம்பாக்கம் சமிதியில் ஏப்ரல் 19 முதல் ஏப்ரல் 24 வரை பகவானின் ஆராதனை நாள் விழா கடந்த ஆறு வருடங்களாக சிறப்பாக நடைபெற்றுவருகிறது, இதில் நாராயண சேவா 300 நபர்களுக்கு மேல் வழங்கப்பட்டது. ஏப்ரல் 19 –மகிளா நாள் பஜனை மற்றும் சிறப்புரை; ஏப்ரல் 20 –பஜனை மற்றும் சிறப்பு இசை நிகழ்ச்சி; ஏப்ரல் 21 -சாய் சகஸ்ர நாம அர்ச்சனை; ஏப்ரல் 22 –சிறப்பு கலந்துரையாடல்; ஏப்ரல் 23 – நகரஸங்கீர்தணம் / மாலை பஜனை; ஏப்ரல் 24 - நகர்ஸங்கீர்தணம் / மாலைபஜனை





# காஞ்சிபுரம் வடக்கு

## ஸ்ரீ சத்யசாயி ஆராதனை மஹோத்சவம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை 1710**

பகவானின் அருளால், குரோம்பேட்டை சமிதியில், **2023** ஏப்., **24**ல், சுவாமி ஆராதனை விழா, நகர்சங்கீர்த்தனத்துடன் துவங்கியது.

அம்பேத்கர் நகர் பஜனை மண்டலியில் (தத்தெடுக்கப்பட்ட எஸ்.எஸ்.எஸ்.வி.ஐ.பி கிராமம்) காலை **11** மணியளவில் மகிளாக்கள், பால்விகாஸ் மாணவர்களின் பஜனை மற்றும் மகிளாக்களால் தயாரிக்கப்பட்ட நாராயண சேவையுடன் தொடங்கி, சுமார் **121** நாராயணர்களின் குடும்பங்களுக்கு சுவாமியின் புகைப்படம் மற்றும் விபூதி பிரசாதத்துடன் விநியோகிக்கப்பட்டது.

நண்பகல் **12** மணியளவில் எஸ்.வி.ஐ.பி தத்தெடுக்கப்பட்ட கிராமமான சஞ்சய் காந்தி நகரில் **110** குடும்பங்களுக்கு சுவாமி புகைப்படத்துடன் கூடிய நாராயண சேவை மற்றும் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது.

ஏப்ரல் **30, 2023** அன்று சுவாமியின் ஆராதனை தினத்தின் தொடர்ச்சியாக குரோம்பேட்டை சமிதியில் **56** பேர் **(6** வாத்தியக் கலைஞர்கள் உட்பட) பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஸ்வாமிக்கு பாடி அர்ப்பணித்தனர்.

ஏப்.,**1** முதல், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், நீர் மோர் வினியோகம் துவங்கியது.வாரந்தோறும், **40** லிட்டர் தயிர் **(200** லிட்டர் நீர் மோர் ஆக கரைக்கப்பட்டது) வினியோகிக்கப்பட்டது.

**27.04.2023** அன்று தண்ணீர் பந்தல் குளிர்ந்த பானையுடன் அமைக்கப்பட்டு மெயின் ரோட்டில் வைக்கப்பட்டு தினமும் சராசரியாக **180** பேருக்கு வழங்கப்படுகிறது.

# திருப்பூர்

## பாத பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
70

பயனைடைந்தோர் எண்ணிக்கை

**29/04/23** அன்று மாலை **05.00** மணி முதல் **07.00** மணி வரை, ராம்நகர் சமிதி சார்பில் , தி.ரு.வி.க. நகர் பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்தனர்.





# திருப்பூர்

## ஆராதனை உற்சவம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**65**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**1200**

பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபா ஆராதனா மஹோத்ஸவம், ஸ்ரீ சத்ய சாய் சேவா மையத்தில் ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் திருப்பூர் சார்பில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. **24.04.2023** காலை **5** மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், கணபதி ஹோமம் நடைபெற்றது. பின்னர் காலை **7.30** மணிக்கு பிரசாந்தி கொடியேற்று விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மதியம் **11.30** மணிக்கு பொதுமக்களுக்கான நாராயண சேவை நடைபெற்றது. பின்னர் மாலை **5.30** மணிக்கு வேத பாராயணம் மற்றும் சாய் பஜன், சிறப்பு சொற்பொழிவு, இறுதியில் மகா மங்கள ஆரத்தியுடன் சிறப்பாக முடிவடைந்தது.







# திருப்பூர்

## நீர் மோர் விநியோக சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**6**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**1200**

சுவாமியின் அருள் ஆசியால், நீர் மோர் விநியோகம் சேவை, **14/04/23** முதல், அமராவதி பாளையம் சமிதி சார்பில், பெருந்தொழுவு ரோட்டில் உள்ள பேருந்து நிறுத்தம் மற்றும் **24/04/23** தேதி முதல் காந்திநகர் சமிதி சார்பில், காந்திநகர் பேருந்து நிறுத்தம் அருகில் நல்ல முறையில் தொடர்ந்து ஒரு மாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது . தினமும் **1200** பேர் பயனடைகின்றனர்










## திருப்பூர்

# அலுவலகப் பொறுப்பாளர்கள் கூட்டம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
28

பயனைடைந்தோர் எண்ணிக்கை

**06.04.23** அன்று நமது துணை மாநிலத் தலைவர் ஸ்ரீ சாயி ஸ்ரீதர் அவர்களுடன் மாலை **6** மணிக்கு ராம் நகர் மந்திரில் ஒரு கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சமிதி கன்வீனர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





# திருப்பூர்

## நாற்று பராமரிக்கும் சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**45**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**200**

சுவாமியின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, உலகம் எங்கும் ஒரு கோடி மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, பக்தர்களின் இல்லத்தில் நாற்று பராமரிக்கும் சேவை ஆனது ஏற்பாடு செய்யப்பட்டது. அதை முன்னிடடு ஞாயிற்றுக்கிழமை 16.4.2023 அன்று காலை 7 மணிக்கு பல்லடம் ரோடு யூனிட் 2 சமிதியின் சார்பாக வீரபாண்டி, கல்லாங்காடு, முத்துநகர் பூங்காவில் விதைகளால் ஆன மரக்கன்றுகளை உருவாக்க, தேவையான மரக்கன்றுகளின் விதைகளை வாங்கி வீட்டில் பராமரித்து வளர்த்து இந்த ஆண்டு சுவாமியின் பிறந்த நாளை முன்னிட்டு அந்த விதைகளால் ஆன மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டுள்ளது.





# திருப்பூர்

## நீர் மோர் விநியோக சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**10**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**1000**

**14/04/2023** வெள்ளிக்கிழமை - தமிழ் புத்தாண்டை ஒட்டி கீழ்கண்ட நிகழ்ச்சிகள் ராம் நகர் மந்திரில் வெகு சிறப்பாக நடைபெற்றன. காலை **5** மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம். இதைத்தொடர்ந்து காலை **9** மணிக்கு பஜன்.

பின்னர் காலை **9.30** மணிக்கு நீர்மோர் சேவை ராம்நகரில் ஆரம்பிக்கப்பட்டு மே மாதம் **14** ஆம் தேதி வரை இச்சேவை நடைபெறவுள்ளது. பின்னர் மாலை **06.00** மணிக்கு சிறப்பு பஜன் நடைபெற்றது.





## திருப்பூர்

# திருக்கோவில் சேவை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 8 | |

அருள்மிகு பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவிலில் பக்தர்களுக்காக சேவை பணிகள் மார்ச் 31 முதல் ஏப்ரல் மாதம் முழுவதும் வெள்ளி , சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடை பெறுகிறது. இந்த சேவையில் கோவை மாவட்ட சாய் இளைஞர்கள் 8 பேர் உடன் இணைந்து திருப்பூர் மாவட்டம் சார்பாக சாய் இளைஞர்கள் 8 பேர் மற்றும் தமிழ்நாடு தெற்கு மாநில இளைஞரணி பொறுப்பாளர் திரு. பிரசன்ன வெங்கடேஷ் அவர்களும் கலந்து கொண்டு ஒரு முறை மட்டுமே உபயோக படுத்தும் பொருட்கள் பக்தர்களிடம் இருந்து சேகரித்தல், அகற்றல் மற்றும் வாகன நிறுத்துமிடம் மற்றும் போக்குவரத்து சரி செய்தல் ஆகிய சேவை பணிகளில் சிறப்பாக செய்தனர்.





# திருப்பூர்

## இரத்த தான முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**15**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**44**

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் திருப்பூர் மாவட்டம் மற்றும் திருப்பூர் அரசு மருத்துவமனை இணைந்து நடத்தும் இரத்த தான முகாம் **23.04.23** ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ சத்ய சாய் விஹாரில் காலை **08.00** மணி முதல் மதியம் **12.00** வரை சுவாமியின் அருளால் வெகு சிறப்பாக நடைபெற்றது.





# திருப்பூர்

## ரத உற்சவம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 30 | 280 |

பகவானின் பேரருளால் ஆராதனை தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை **23.4.2023** அன்று பால விகாஸ் குழந்தைகள் மற்றும் ratha utsava அவர்களின் பெற்றோர்கள், குருமார்கள், சமிதி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் சத்ய சாய்பாபா அவர்களின் ரத உற்சவம் ராம்நகர் மந்திரில் சிறப்பாக நடைபெற்றது. இதைத்தொடர்ந்து மறுநாள் நடக்கவிருக்கும் ஆராதனா தின நாராயண சேவைக்கு சமையல் ஏற்பாடுகள் ஆரம்பமானது.





## திருப்பூர்

# ஆராதனா தினத்தை முன்னிட்டு பால விகாஸ்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**320**

சுவாமியின் ஆராதனா தினத்தை முன்னிட்டு பால விகாஸ் குழந்தைகளின் வீட்டில் சாய் பஜன் **01.04.23** முதல் **24.04.23** வரை மாலை **06.00** மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. மேலும் மதியம் **12.00** மணிக்கு பால விகாஸ் மையங்களில் நாராயண சேவை **24** நாட்களுக்கு நடைபெற்றது.







## திருப்பூர்

# பல்லக்கு ஊர்வலம் மற்றும் நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை **250**

பயனைடைந்தோர் எண்ணிக்கை **500**

பகவானின் அருளால் திருப்பூர் மாவட்டம் காந்தி நகர் சமிதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பகவானின் பல்லக்கு ஊர்வலம் **14-04-23** வெள்ளிக்கிழமை அன்று சோபகிருது புத்தாண்டு நன்னாளில் கொடைக்கானல் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயிலில் இருந்து கொடைக்கானல் நகர் பகுதி வரை நடைபெற்றது. சாயி அன்பர்கள் மற்றும் பக்தர்கள் பலர் நகர சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர் பக்தர்களுக்கு மொத்தம் **1000** லட்டுக்கள் மற்றும் விபூதி பிரசாதங்கள் வழங்கப்பட்டன. இதைத்தொடர்ந்து சாய் ஸ்ருதி மந்திரில் பிற்பகல் நேரத்தில் **500** நபர்களுக்கு நாராயண சேவை வெகு சிறப்பாக நடைபெற்றது.

அருகில் உள்ள பகுதி மக்களுக்கு வாகனம் மூலம் பகவானின் பிரசாதம் விநியோகம் செய்யப்பட்டது. மாலை சிறப்பு பஜனைத் தொடர்ந்து மதுரை மாவட்டத் தலைவர் அவர்கள் தங்கள் சிறப்புரையை வழங்கினார். மேற்கண்ட நிகழ்வில் மதுரை மாவட்ட சாயி அன்பர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், கொடைக்கானல் சாயி சமிதி, மூஞ்சிகல் சாயி சமிதி சேவாதள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மறுநாள் சாய் கேசவ்வில் உழவாரப்பணிகள் மேற்கொள்ளப் பட்டது.





# திருப்பூர்

## மகிளா சாதனா முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
87

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பகவானின் பெரும் கருணையினால் திருப்பூர் மாவட்டத்தில் **09.04.2023** ஞாயிற்றுக்கிழமை காலை **8.30** மணி முதல் மதியம் **2.30** மணி வரை மகிளா சாதனா முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் **87** மகளிர் கலந்து கொண்டனர் ( திருப்பூர் - **75** + உடுமலைப்பேட்டை - **6** + வெள்ளகோயில் - **6**). இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



## திருப்பூர்

# பேரிடர் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி முகாம்

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**18**”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை
**116**”

**08.04.2023** சனிக்கிழமை அன்று உடுமலை ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதிகள் மற்றும் உடுமலை ஜி.வி.ஜி மகளிர் கலைக் கல்லூரியும் இணைந்து பேரிடர் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி முகாம் ஜி.வி.ஜி மகளிர் கலைக் கல்லூரியில் சிறப்பாக நடத்தினர். இதில் நமது மாவட்டத் தலைவர் அவர்கள் துவக்க உரையாற்றினார் மற்றும் கல்லூரி இயக்குனர் அவர்களும் ஏற்புரையுடன் தன் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். மேலும் கல்லூரி முதல்வர், NCC இயக்குநர் மற்றும் சமிதி பொறுப்பாளர்களுடன் NCC & NSS மாணவிகளும் திரளாக (116 பேர்) கலந்து கொண்டனர். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் அவர்தம் குழுவினர்கள் சிறப்பானதொரு வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியினை எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் வழங்கினார்கள். மாணவிகளும் சேவைப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஆர்வமுடன் அவர்கள் தம் பெயர்களை பதிவு செய்து கொண்டனர். மேலும், பயிற்சி முகாம் தேசிய கீதத்துடன் இனிதாக நிறைவடைந்தது.





திருப்பூர்

# பல்லக்கு ஊர்வலம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 22 | |

சுவாமியின், பங்குனி மாத பௌர்ணமி பட ஊர்வலம், புதன்கிழமை **05/04/2023** அன்று சேரன் நகர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் நல்லூர் பஜனா மண்டலியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.





# திருப்பூர்

## கண் சிகிச்சை முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 231 |

திருப்பூர் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் பி.என் ரோட்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் விஹாரில் சுவாமியின் அருள் ஆசியுடன் சிறப்பாக நடைபெற்றது. **231** வெளி நோயாளிகள் பயனடைந்தனர். **55** பேர் கண் அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

### ஸ்ரீசத்ய சாய் பக்தர்களின் உன்னத சேவை

**திருப்பூர், ஏப். 3–**

ஸ்ரீ சத்ய சாய் சேவா மையம், அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில், ஒவ்வொரு மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை கண் சிகிச்சை முகாம் நடத்தப் படுகிறது.

அவ்வகையில், திருப் பூர், பி.என்., ரோடு, மில் லர் ஸ்டாப்பில் உள்ள, ஸ்ரீ சத்ய சாய் சேவா மையத் தில் இலவச கண் புரை அறுவை சிகிச்சை முகாம் நேற்று நடத்தப்பட்டது.

இம்முகாமில், கண் பரிசோதனை, அறுவை



திருப்பூர், பி.என்., ரோடு, மில்லர் ஸ்டாப்பில் உள்ள, ஸ்ரீசத்ய சாய் சேவா மையத்தில், இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.

ஓம் ஸ்ரீ சாய்ராம் ஓம் ஸ்ரீ சாய்ராம்

**இலவச கண் புரை அறுவை சிகிச்சை முகாம்**

ARAVIND EYE CARE SYSTEM

**அரவிந்த் கண் மருத்துவமனை**

**இடம் : ஸ்ரீ சத்ய சாய் சேவா மையம்**

மில்லர் பஸ் ஸ்டாப், பி.என்.ரோடு, திருப்பூர்

**நாள் : 2.4.2023 (ஞாயிறு)**

நேரம் : காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

அறுவை சிகிச்சை. லென்ஸ், மருந்து, தங்கும் வசதி, உணவு அனைத்தும் இலவசம்

## திருவண்ணாமலை

# பொது மருத்துவ முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 31 | 355 |

நமது பகவானின் அருளால், ஏப்ரல் 2, 2023 அன்று, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள தும்பக்காடு கிராமத்தில், TVS SST உடன் இணைந்து, பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மருத்துவ முகாமில் 355 பேர் பயனடைந்தனர். இந்த சேவையில் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சி வடக்கு, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த சேவாதளர்கள் கலந்து கொண்டனர்.முகாமின் போது வழங்கப்பட்ட மருத்துவ சேவைகள்: பொது மருத்துவ பரிசோதனை, குழந்தை மருத்துவம் மற்றும் பெண்களுக்கான மருத்துவம்.கிராம மக்களுக்குக் குருதி வகையும் வகைப்படுத்தப்பட்டுள்ளது மேலும் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளின் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. நோயாளிகளுக்கு இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன.

அவர்களின் பல் சுகாதாரத்தை பராமரிக்க, கிராம மக்களுக்கு பல் துலக்கும் பிரஷ் மற்றும் பற்பசை) வழங்கப்பட்டது. கிராமத்தில் நாராயண சேவையும் வழங்கப்பட்டது.





# திருநெல்வேலி

## ஆன்மீக சாதனா முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 75 | |

பகவானின் பரிபூரண அருளாசியுடன் ஸ்ரீ சத்யசாய் சேவா நிறுவனங்கள் திருநெல்வேலி சார்பாக *ஆன்மீக சாதனா முகாம் "கரிஷ்யே வசனம் தவ" ஸ்ரீ சத்ய சாய் பாலகுருகுலம் பள்ளியில் நேற்று 16.4.2023 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் ஜோதி த்யானம், பஜனை, வாசகர் வட்டம், நாம ரூப த்யானம் மற்றும் நகர சங்கீர்த்தனம் போன்றவற்றில் பகவான் காட்டிய வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் மாநில ஆன்மீக ஒருங்கிணைப்பாளர், மதுரை மாவட்ட தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தார்கள். திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து *40 ஆடவரும் 35 மகளிர் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.






# திருநெல்வேலி

## சிறப்பு பஜனை மற்றும் திரு விளக்கு பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பகவானின் அருளாசியுடன் ஸ்ரீ சத்யசாய் சேவா நிறுவனங்கள் திருநெல்வேலி சார்பாக கிருஷ்ணா புரம் அருகிலுள்ள நொச்சிகுளம் கிராமத்தில் தமிழ்ப் புத்தாண்டினை முன்னிட்டு சிறப்பு பஜனை மற்றும் திரு விளக்கு பூஜையும் நடைபெற்றது.






# தஞ்சாவூர்

## நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
4

பயனடைந்தோர் எண்ணிக்கை
14

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கும்பகோணம் சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுப் பொட்டலங்களும் தண்ணீர் குப்பிகளும் வழங்கினார்கள்.





# தஞ்சாவூர்

## பக்தர் தொடர்பு திட்டம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 6 | |

**9-4-23** ஞாயிற்றுக்கிழமை மாலை **6-30**மணிக்கு, திருவாரூர் சமிதிக்கு தஞ்சை மாவட்ட தலைவரும், மற்றும் மாவட்ட சேவா ஒருங்கிணைப்பாளரும் , சமிதி அளவிலான கூட்டத்தில் பங்கேற்று, " ஆசைக்கு ஓர் வரம்பு ", மூத்த பக்தர்களை நேர் காணல், குடும்ப நாராயண சேவை "களைப்பற்றி எடுத்துரைத்தனர். கூட்டத்திற்குப் பிறகு சமிதியின் மூத்த பக்தர் திரு. மஹாலிங்கம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து பகவான் பிரசாதங்களை வழங்கினார். வாய்ப்பளித்த பகவானுக்கு நன்றி



# தஞ்சாவூர்

## பஞ்சாங்க படணம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
20

பயனைடைந்தோர் எண்ணிக்கை

சாய்ராம், தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கும்பகோணம் சமிதியில், வழக்கம்போல் பஞ்சாங்க படணம் நடந்தது. மாலை 5-00 மணிக்கு கணபதி பூஜையுடன், பஞ்சாங்க படணம் நிகழ்ச்சி துவங்கியது. கிட்டத்தட்ட 20 பக்தர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பகவானுக்கு நன்றி.



## சாய்புரதம் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
6

பயனைடைந்தோர் எண்ணிக்கை
40

கும்பகோணம் மேல்க்காவேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி கும்பகோணம் மகிளாஸ் சார்பில் 40 சாயி புரோட்டீன் பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன. வாய்ப்பளித்த பகவானுக்கு நன்றி. இந்த சேவையில் ஆறு மகிளாகள் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர்

## ஆராதனா மஹோத்ஸவம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 300 | |

கும்பகோணம் சமிதியில் பகவானின் ஆராதனை உத்ஸவத்தை முன்னிட்டு காலை **5-30** மணி ஓம்கார் சுப்ரபாதம் நாகர்சங்கீர்த்தனம் **7-00** முதல் ஸ்ரீ பூர்வதா மஹான்யாஸ ஏகாதச ருத்ர ஜப ஹோமம், மற்றும் மாலை **4-30** மணி உள்ளூர் மண்டலிகளின் மகிளாக்களால் பஞ்ச ரத்ன கீர்த்தனை நடைபெற்றது.





# தஞ்சாவூர்

## பிரேம பந்தம் மாவட்ட இளைஞர் நிகழ்ச்சி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 6 | 52 |

**23** ஏப்ரல் **2023** அன்று ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதி கும்பகோணத்தால், மாவட்ட இரு பாலின இளைஞர்களுக்கான பிரேம பந்தம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பால்விகாஸ் முன்னாள் மாணவர்களுடன் ஸ்ரீ. ராஜேந்திரன் சாய்ராம், மாநில சேவை ஒருங்கிணைப்பாளர், டாக்டர் பிரசன்னா வெங்கடேஷ், மாநில இளைஞரணி ஆண்கள் ஒருங்கிணைப்பாளர், ஸ்ரீ. **A.** ஹரீஷ், மாநில வேதம் ஒருங்கிணைப்பாளர் **(TNS)**, ஸ்ரீமதி. சாய்தேவி, மாநில இளைஞர் மகிளா ஒருங்கிணைப்பாளர், ஸ்ரீமதி. பாமா மண்டல மகளிர் ஒருங்கிணைப்பாளர் , மற்றும் என்.எல்.பி பட்டதாரி இளைஞர்கள் பங்கேற்று, இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரைகளை ஆற்றினர். மேலும் இந்நிகழ்ச்சியில் நம் நிறுவனத்தில் உள்ள பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் ஊடகப் பிரிவுகளைப் பற்றியும், அதில் இளைஞர்கள் எவ்வாறு இறைத்தொண்டாற்றலாம் எனவும் விவரிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சுமார் **52** இளைஞர்கள் தீவிரமாக பங்கு பெற்றனர்.





# தஞ்சாவூர்

## தண்ணீர் பந்தல் / நீர் மோர் பந்தல்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**22**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**1000**

மகிளா தினைத்தை முன்னிட்டு கோடைகால தண்ணீர் பந்தல் / நீர் மோர் பந்தல் துவக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது







## சேலம்

# இலவச கண் சிகிச்சை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
25

பயனைடைந்தோர் எண்ணிக்கை
102

சேலம் டவுன் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 1/4/2023 ஆங்கில மாதம் முதல் சனிக்கிழமை,காலை 10மணி முதல் மதியம் 2மணி வரை கோவை சங்கரா கண் மருத்துவமனையுடன் நடைபெறும் மாதாந்திர இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இன்றைய கண்சிகிச்சை முகாமில் 102 பேருக்கு 57 ஆண்கள் மற்றும் 45 பெண்கள்) பரிசோதனை செய்யப்பட்டதில் 40 பேர் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்ய பட்டனர். இதில் அதிக இரத்த அழுத்தம் மற்றும் உயர் சர்க்கரை போன்ற காரணங்களால் 62 பேர் தேர்வு செய்யப்படவில்லை. மீதம் உள்ள 40 பேர் (ஆண்கள் 20 பெண்கள் 20) பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு கோவை சங்கரா கண் மருத்துவமனைக்கு அவர்கள் பேருந்திலேயே அழைத்துச் சென்று நல்லவிதமாக அறுவை சிகிச்சை முடிந்து பார்வை பெற்று திரும்ப உள்ளார்கள். சேலம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியை சார்ந்த 25 க்கும் மேற்பட்ட சேவாதள அன்பர்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர்.





## சேலம்

# தையல் பயிற்சி தொடக்க விழா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
6

பயனைடைந்தோர் எண்ணிக்கை
11

சேலம் மாவட்டம் சூரமங்கலம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 15/4/2023 சனிக்கிழமை காலை 10மணி முதல் ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையம் சார்பில் தையல் பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது. இதில் நான்கு அதி திறன் கொண்ட தையல் இயந்திரங்கள் மூலம் நமது பயிற்சி பெற்ற மஹிளாக்களை கொண்டு மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்க படுகிறது.இதில் சூரமங்கலம் பகுதியை சேர்ந்த ஏராளமான பெண்கள் பயன்பெறுவர்




# மகிளா சாதனா சிபிர்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
40

பயனைடைந்தோர் எண்ணிக்கை

சேலம் டவுன் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 16/4/2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி முதல் மதியம் 2மணி வரை மாவட்ட அளவிலான மஹிளாக்கள் சாதனா சிபிர் நடைபெற்றது

# சேலம்

## ஏகாதச ருத்ர பாராயணம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

சேலம் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சார்பாக **14/4/2023** வெள்ளிக்கிழமை காலை **10**மணி முதல் சாயி அன்பர் திரு.குமரேசன் சாய்ராம் இல்லத்தில் ஏகாதச ருத்ர பாராயணம் நடைபெற்றது. இதில் ஏராளமான சாயி பக்தர்கள் கலந்து கொண்டு பகவானின் பேரருள் பெற்றனர்





# சேலம்

## ஆராதன தின நாராயண சேவா

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 2000 |

சுவாமியின் ஆராதனை தினத்தை முன்னிட்டு **23.04.2023** ஞாயிறு இரவு பிரசாதம் செய்து அதை **24.04.2023** திங்கள் காலை சேலம் டவுன் சமிதி கன்வீனர் தலைமையில் **5** கிராமங்களுக்கும் திரு முரளி சாய்ராம் தலைமையில் சேலம் டவுனில் உள்ள பஸ் நிலையம், ரயில் நிலையம் மற்றும் கோவில்கள் அருகே உள்ள நாராயணர்களுக்கு அருள் பிரசாதம் அவர்கள் பசியாற வழங்கினார்கள். சுவாமியின் பெரும் கருணையினால் இந்த மகத்தான சேவை நன்றாக நடந்தது. நமது டவுன் சமிதியில் **1300** உணவு பொட்டலங்கள் மற்றும் மன நல பாதிக்கப்பட்டோர் ஹோம் மற்றும் ஆதரவற்ற முதியோர் இல்லம் ஆகிய இரண்டு இடங்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த சேவையில் ஈடுபட்ட அனைத்து சேவாதள அன்பர்களுக்கும் நமது பகவானின் பரிபூரண அருள் கிடைக்க பிரார்த்திப்போம்.





ஈரோடு

# பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி பட்டறை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
1

பயனடைந்தோர் எண்ணிக்கை
22

மாவட்ட அளவிலான திறன் வளர்ப்பு பயிற்சியின் ஒரு பகுதியாக, செய்முறை விளக்க வகுப்பு பெண் பயிற்சியாளரை கொண்டு நடைபெற்றது. அதில் பிளாஸ்டிக் வயர் மூலம் கூடை முடைதல், முத்து அணிகலன்கள் செய்தல், மற்றும் வாழ்த்து அட்டை தயாரித்தல் ஆகியவை கற்றுத் தரப்பட்டன. பல்வேறு மகிளாக்கள் மற்றும் குழந்தைகள் இதில் ஆர்வத்துடன் பங்கு பெற்று தங்களின் திறமைகளை வெளிக்காட்டினர்.






ஈரோடு

## நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**300**

பெரிய மாரியம்மன் கோவில் கம்பம் திருவிழாவை முன்னிட்டு, பக்தர்களுக்கு இலவச நீர் மோர் பானகம் கம்பு கூழ் சுண்டல் மற்றும் தக்காளி சாதம் ஆகியவை ஏப்ரல் ஐந்து மற்றும் ஆறு **2023** ஆகிய இரு தினங்களும் வழங்கப்பட்டன இந்த சேவையை ஈரோடு மெயின் சாய் சமிதியை சேர்ந்த பக்தர்கள் செய்தனர். இதில் பயனடைந்தோர் எண்ணிக்கை **300.**

## ஸ்ரீ சத்ய சாயி திருவாதிரை நட்சத்திர பூஜை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**7**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**

நமது சுவாமியின் திரு நட்சத்திரமான ஆருத்ரா நட்சத்திர தினத்தன்று ஈரோடு பவானி சமிதியில் மாதம் தோறும் வேத பாராயணம், அஷ்டோத்திர சத நாமாவளி பாராயணம், மற்றும் தபோவனம் பாராயணம் நடைபெற்று வருகிறது.

# ஈரோடு

## நாராயண சேவை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 20 | 6000 |

பங்குனி உத்திர விழாவை முன்னிட்டு திண்டல் ஸ்ரீ முருகன் கோவிலிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் 6 ஆயிரம் பக்தர்களுக்கு நமது மாவட்ட அளவிலான சேவாதளத் தொண்டர்கள் மூலம் நாராயண சேவை பிரசாதம் வழங்கப்பட்டது.





# ஈரோடு

## ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
150

ஈஸ்வரம்மா தின கொண்டாட்டங்கள் முன்னதாகவே காந்திநகர் சமிதியில் ஆரம்பித்து, தத்து கிராமம் ஆகிய செங்கோடன் பாளையத்தில் **23/4/2023** அன்று கொண்டாடப்பட்டது. தத்து கிராமங்களாகிய ஜே ஜே நகர், சத்யா நகர் மற்றும் செங்கோடன் பாளையம் ஆகிய கிராமங்களில் இருந்து மக்கள் பங்கேற்றனர் . பஜனை, ஸ்லோகம் கூறுதல், கதை சொல்லுதல், அன்னை ஈஸ்வரம்பாவை பற்றிய சிறப்புரை கோலாட்ட நடனம் ஆகியவை குழந்தைகளால் நடத்தப்பட்டன. கன்வீனர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் முன்னாள் பாலவிகாஸ் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினார். குருப் **2** சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மகா மங்கள ஆரத்தியுடன் **150** பேருக்கான நாராயண சேவையும் நடைபெற்றது.







## ஈரோடு

# கோவில் கும்பாபிஷேகத் திருவிழா.

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
71

பயனைடைந்தோர் எண்ணிக்கை

குறிப்பிட்ட இரண்டு கோவில்களிலும் கும்பாபிஷேக தினத்தன்று ஈரோடு மாவட்டத்திலிருந்து சேவாதள தொண்டர்கள் பங்கு கொண்டு மக்களை சரிப்படுத்தி அனுப்பும் பணியிலும் நாராயண சேவையிலும் ஈடுபட்டனர். மேலும், இலவச குடிநீர் சேவையும் **21** முதல் **26 2023** வரை நடைபெற்றது யாகசாலையின் முன்பாக சிறப்பு பஜனையும் **23/4/2023** அன்று நடைபெற்றது.





# ஈரோடு

## சாதனா முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**65**

மாவட்ட அளவிலான மஹிளா ஒருங்கிணைப்பாளர்களுக்கான சாதனா முகாம் பிரசாந்தி கொடியேற்றத்துடன் துவங்கியது. இதில் பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற மகளிர் சாதனா முகாமில் கலந்து கொண்ட பதினைந்து மஹிளா ஒருங்கிணைப்பாளர்கள் அங்கு உரையாற்றிய செய்திகளைப் பற்றியும், மூன்று பிரிவுகளில் ஆற்ற வேண்டிய சேவை பணிகள் பற்றியும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தனர். இதில் பல்வேறு சமிதியை சேர்ந்த **65** மஹிளா ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# ஈரோடு

## இளைஞர்களுக்கான பேரிடர் மேலாண்மை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**2**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**13**

ஏப்ரல் **2.2023** அன்று இளைஞர்களுக்கான சாதனா முகாம் மற்றும் பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம் ஈரோட்டில் நடைபெற்றது. இதில் பல்வேறு சமிதியை சேர்ந்த சேவா பணிகளைப் பற்றியும், முடிச்சுகள் மற்றும் காப்பாற்றும் வழிமுறைகளின் மூலம் பேரிடர் மேலாண்மை பயிற்சியும் அளிக்கப்பட்டது. திருப்பூர் பேரிடர் மேலாண்மை குழுவினர் ஈரோட்டில் உள்ள இளைஞர்களுக்காக இந்த பயிற்சி முகாமை சிறப்புற நடத்தினர்.





# காஞ்சிபுரம் தெற்கு

## தினசரி உபயோக பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 10 | 30 |

வெங்கடாபுரம் ஞானோதய விடுதி ஏழை மாணவ மாணவிகளுக்கு தேவையான தினசரி உபயோக பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் **10** சேவாதளத்தொண்டர்கள் கலந்து கொண்டனர் சமிதியின் **20** உறுப்பினர்களின் ஆதரவு டன் தினசரி உபயோகப்பொருட்கள் ரூபாய் **7000/-** மதிப்புடையது பள்ளி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் **30** மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது குளியல் சோப்பு **-50,** சலவைசோப்பு **-30,** தேங்காய் எண்ணெய் **3**லிட்டர், பற்பசை **30,** முகப்பவுடர் **3**பெரிய டப்பா, பினாயில்**10,** லைசால் **10,** ஹார்பிக் **10.**

கூடுவாஞ்சேரி சமிதியின் சேவையைப்பாராட்டி வெங்கிடாபுரம் பள்ளி முதல்வர் நன்றிக்கடிதம் அனுப்பியுள்ளார்



## பஞ்சமஹாயக்யம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 92 | 57 |

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் கரசங்கால் என்னும் கிராமத்தில் ஸாயி நிறுவனத்தின் கல்வி ,சேவை மற்றும் ஆன்மீக பிரிவில் உள்ள அனைத்து மகளிரும் ஒன்றிணைந்து ஏப்ரல் 7 ம் நாள் 'பஞ்சமஹாயக்யம் ' என்னும் மாபெரும் நிகழ்ச்சியினை நடத்தினர். இந்நிகழ்ச்சி அன்று காலை 8.30 மணியளவில் அன்பு தீபம் ஏற்றப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. முதலில் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் அவர்கள் இந்நிகழ்ச்சி பற்றி அறிமுக உரை ஒன்றினை நிகழ்த்தினார். பின்னர் நிகழ்ச்சி தொடங்கியது. முதலாவதாக "தேவயக்யம்" என்னும் தலைப்பில் பாலவிகாஸின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளைச்சார்ந்த மாணவிகள் வேதம் ஓதினர். அதனைத்தொடர்ந்து அவர்களே அருமையானதொரு பஜனை நிகழ்ச்சியையும் நிகழ்த்தினர். இரண்டாவதாக "பூத யக்யம்" என்னும் தலைப்பில் "'கோ பூஜை" 'அருகாமையில் உள்ள கோயிலில் நடை பெற்றது.மகளிர் ஸ்ரீ சூக்தம் மற்றும் 'கோ' சூக்தம் ஓத அனைத்து மகளிரும் பசுவிற்கு பூஜைகள் செய்தனர். மூன்றாவதாக "பித்ரு யக்யம்" என்னும் தலைப்பில், மாத்ரு பூஜை என்னும் பெற்றோர்களின் பாதங்களுக்குச்செய்யப்படும் பாதபூஜை நிகழ்ச்சி ,அக்கிராமத்து குழந்தைகளால் மிகச்சிறப்பாக நடத்தப் பெற்றது. நான்காவதாக "மனுஷ்ய யக்யம்" என்னும் தலைப்பில் அக்கிராம மகளிருக்கு மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

## காஞ்சிபுரம் தெற்கு

### பஞ்சமஹாயக்யம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 92 | 57 |

இம்முகாமில் குழந்தை பேறு மருத்துவர் விசாலாட்சி அவர்களும் காது மூக்கு தொண்டை நிபுணர் மருத்துவர் காஷ்யப் அவர்களும் கலந்துகொண்டு பயனாளிகளை பரிசோதித்தனர். இம்முகாமில் அவர்களுக்கு நீரிழிவு சோதனை இரத்த அழுத்த சோதனை ஹீமோகுளோபின் சோதனை இரத்தசோகை சோதனை எலும்பு அடர்த்தி சோதனை மற்றும் கண்புரை நோய் கண்டறியும் சோதனை ஆகிய சோதனைகள் நடத்தப்பெற்று தகுதியுடையோருக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. மேலும் மருத்துவர் விசாலாட்சி அவர்கள் சுத்தம் சுகாதாரம் பற்றி கிராம மகளிருக்கு விளக்கிக் கூறினார்.இந்த மருத்துவ முகாமின் மூலம் 57 மகளிர் பயன் அடைந்தனர். ஐந்தாவதாக "பிரம்ம யக்யம்" என்னும் தலைப்பில் நம் அன்பு பகவான் நமக்கு அருளிய போதனைகளை மையமாக வைத்து ஒரு வாசகர் வட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்ததாக "அதிதி யக்யம்" என்னும் தலைப்பில் அக்கிராமத்தைச் சார்ந்த தொழிலாளிகளுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டன. அக்கிராம குழந்தைகளுக்கு விளையாட்டுகள் நடத்தப்பட்டன. மற்றும் கோலப்போட்டிகள் நடத்தப்பெற்றன.தொடர்ந்து நம் பாலவிகாஸின் பிரிவு நான்கைச்சேர்ந்த மாணவிகள் உடல் ஆரோக்கியம் சுத்தம் சுகாதாரம் மற்றும் சத்தான உணவு வகைகள் ஆகியன பற்றி விளக்கி உரையாற்றினார்கள்.மேலும் ஒரு சிறு நாடகம் ஒன்றினையும் நிகழ்த்திக் காட்டினார்கள்

# காஞ்சிபுரம் தெற்கு

## பஞ்சமஹாயக்யம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 92 | 57 |

இறுதியாக இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக நடை பெறுவதற்கு பல்லாற்றானும் உதவிகள் செய்து ஒத்துழைப்பு நல்கிய ஊர் தலைவரை பாராட்டும் முகத்தான் அவருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு ஸ்வாமியின் படம் ஒன்று நம் அன்பு பரிசாக வழங்கப்பட்டது அவற்றை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு சிறிய உரை ஒன்றை ஆற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட தலைவர், மாநில துணை தலைவர் அவர்தம் துணைவியார் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தார்கள். நிறைவாக பகவானுக்கு மங்கல ஆரத்தி காட்டப்பட்டு வருகை புரிந்த அனைவருக்கும் ஸ்வாமி பிரசாதமாக நாராயண சேவை வழங்கப்பட்டது.



# காஞ்சிபுரம் தெற்கு

## இலவச மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
6

பயனைடைந்தோர் எண்ணிக்கை
11

பகவான் பரிபூரண ஆசீர்வாதத்தால் பூண்டிபஜார் சமிதியில் இலவச மருத்துவ முகாம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது . தாம்பரம் மருத்துவமனையில் பணி புரியும் மருத்துவர் **1,** செவிலியர் **3,** பெயர் பதிவு நபர் **1** நபர்கள் பங்கு கொண்டனர். இந்த இலவச முகாமில் **11** நபர்கள் பரிசோதனை செய்து கொண்டனர். இந்த மகத்துவமான சாய் சேவையில் சமிதி அங்கத்தினர் ஆண் உறுப்பினர் **4,** பெண் உறுப்பினர் **2** நபர்கள் கலந்து கொண்டு பகவான் ஆசீர்வாதம் பெற்றனர்.



# காஞ்சிபுரம் தெற்கு

## மாபெரும் இரத்த தான முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 3 | 63 |

ஓம் ஸ்ரீ சாய் ராம். நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன் ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் - தமிழ்நாடு - ஸ்ரீபெரும்புதூர் சமிதி மற்றும் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை - காரப்பேட்டை இணைந்து, பென்னலூர் - ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியற் கல்லூரியில் மாபெரும் இரத்த தான முகாம் ஒன்றினை நடத்தினர். நமது மாநில மருத்துவ நடவடிக்கை ஒருங்கிணைப்பாளரான திரு. குணசேகரன் சாய்ராம் அவர்களும், மாவட்ட மருத்துவ நடவடிக்கை ஒருங்கிணைப்பாளரான திரு. சுவாமிநாதன் சாய்ராம் அவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இந்த முகாமை வழிநடத்தினர்.

இதை அக்கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் முன்னின்று செயல்படுத்தினர். இந்த முகாமில் மொத்தமாக **63 unit** இரத்த பைகள் அக்கல்லூரி மாணவர்களால் தானமாக வழங்கப்பட்டது. காலை **9:30** மணியளவில் நமது பகவானின் அருளாசியோடு தொடங்கிய இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழும் வகையில் அக்கல்லூரியின் முதல்வரும், நமது சுவாமியின் மிகப்பெரிய பக்தருமான திரு. கணேஷ் வைத்தியநாதன் சாய்ராம் அவர்கள் இரத்த தானம் செய்தார்.

# காஞ்சிபுரம் தெற்கு

## மாபெரும் இரத்த தான முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**3**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**63**

தொடர்ந்து மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் இரத்த தானம் செய்தனர். இரத்த தானம் செய்த அனைத்து மாணவர்களுக்கும் சிற்றுண்டி, அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், பகவானின் புகைப்படம் மற்றும் விபூதி வழங்கப்பட்டன.

இறுதியில், மருத்துவமனையில் இருந்து வந்த மருத்துவருக்கும், மருத்துவ பணியாளர்களுக்கும் நன்றி கூறும் விதமாக பகவானின் அன்பு பரிசுகள் அக்கல்லூரி முதல்வரால் அன்போடு வழங்கப்பட்டது. பிறகு நன்றியுரை உரைக்கப்பட்டு, பகவானின் மஹா மங்கள ஆரத்தியுடன் முகாம் நிறைவடைந்தது. ஜெய் சாய் ராம்.



# காஞ்சிபுரம் தெற்கு

## தமிழ் புத்தாண்டு & விஷு பண்டிகை கொண்டாட்டம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
40

பயனைடைந்தோர் எண்ணிக்கை
60

தமிழ் புத்தாண்டு & விஷு பண்டிகை கொண்டாட்டம்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், தமிழ் புத்தாண்டு & விஷு பண்டிகை கொண்டாடப்பட்டது. காலை ஓம்காரம் சுப்ரபாதம் தொடங்கி, நகரசங்கீர்தனம், நாராயண சேவை மற்றும் பஜனை நடைபெற்றன. சின்ன காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ருத்ர பாராயணம் & சொற்பொழிவு நடைபெற்றன.



## சாய் பஜனை - ஸ்ரீ சங்கரா முதியோர் இல்லம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
10

பயனைடைந்தோர் எண்ணிக்கை

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சங்கரா முதியோர் இல்லத்தில் சாய் பஜனை மிக சிறப்பாக நடைபெற்றது. பிறகு 7 கிலோ சாய்புரதம் விநியோகம் செய்யப்பட்டது. பிறகு அங்கு உள்ள பெரியவர்களிடம் பால்விகாஸ் குழந்தைகள் ஆசிர்வாதம் பெற்றனர்

# காஞ்சிபுரம் தெற்கு

## ஆராதனை தின மஹோத்ஸவ சேவை நிகழ்ச்சி

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை
7”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை
22”

கூடுவாஞ்சேரி அரசு மருத்துவமனை குழந்தைகள் வார்டில் குழந்தைகளுக்கு சட்டை மற்றும் தினசரி தேவை பொருட்களடங்கிய பெட்டகமும் தாய்மார்களுக்கு சத்துமாவும் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## சாய்புரதம் விநியோகம்

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை
8”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை
250”

தாம்பரம் சமிதி மகிளாஸ் குழு குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 100 பாக்கட் சாய்புரதம் விநியோகம் செய்தனர். சாய் புரதம் அனந்தபூர் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது. பகவான் பாபாவின் ஆராதனை தினத்தை முன்னிட்டு 23.04.2023 அன்று புலிக்கொரடு கிராமத்தில் உள்ள மக்களுக்கு 150 பாக்கட் சாய்புரதம் விநியோகம் செய்யப்பட்டது.

# காஞ்சிபுரம் தெற்கு

## நீர்மோர் வழங்கும் சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**33**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**2300**

ஓம் ஸ்ரீ சாய் ராம். நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த கருணையால், ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவங்கள் - தமிழ்நாடு - ஸ்ரீபெரும்புதூர் சமிதி, மக்களுக்கு நீர்மோர் வழங்கும் சேவையை மேற்கொண்டது.

நமது பகவானின் ஆராதனை மஹோத்சவத்தை முன்னிட்டும், ஸ்ரீமத் ராமானுஜரின் அவதார வைபவத்தின் ஒரு பகுதியான ஸ்ரீமத் ராமானுஜரின் தேர் திருவிழாவை முன்னிட்டும் இச்சேவை நமது ஸ்வாமிக்கும், மக்களுக்கும் அர்ப்பணிக்கபட்டது.

மிகவும் சுத்தமான மற்றும் அன்பு கலந்த முறையில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்களால் தயாரிக்கப்பட்ட இந்த நீர்மோர் முதலில் நமது பகவானுக்கு போஜன மந்திரத்தின் மூலம் அர்ப்பணிக்கபட்டது.

பின்பு இந்த நீர்மோரானது தேர் திருவிழாவில் பங்கேற்ற பக்தர்களுக்கும், மற்ற பொது மக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. அதனை பருகிய மக்கள், தாங்கள் சித்திரை வெயிலின் தாக்கத்தில் இருந்து மீண்டதாக அன்போடும், ஆனந்தத்தோடும் கூறி வாழ்த்திச்சென்றனர்.

நீர்மோர் வழங்கிய பின்னர், சமிதி அங்கத்தினர்களால் பஜனை பாடல்கள் பாடப்பட்டு நிகழ்ச்சி நிறைவடைந்தது. ஜெய் சாய் ராம்.

காஞ்சிபுரம் தெற்கு

# நகரும் மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
41

பயனைடைந்தோர் எண்ணிக்கை
63

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் தனது நடமாடும் மருத்துவ முகாமினை ஏப்ரல் **16**ம் நாள் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள ஸாயி கார்டன்ஸ் என்னுமிடத்தில நடத்தியது. முகாமிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தாம்பரம் சமிதி செய்திருந்து.

இம் முகாமில் கீழ்கண்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளித்ததோடல்லாமல் அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளை எழுதி கொடுத்தனர்.

**1.** மரு. சேஷகிரி அவர்கள் மார்பு நோய் வல்லுனர்.
**2.** மரு . விசாலாட்சி அவர்கள் மகப்பேறு மருத்துவர்
**3.** மரு. அனுராதா அவர்கள் குழந்தை மருத்துவர்.
**4.** மரு. கீர்த்தனா அவர்கள் பொதுமருத்துவம்.
**5.** மரு. யோகேஸ்வரன் அவர்கள் பல் மருத்துவர்.
**6.** மரு. நாகராஜூ அவர்கள் மருத்துவ முகாம் இயக்குனர்.

இம்மருத்துவ குழுவினருக்கு உதவியாக ஆய்வக தொழில் நுட்ப வல்லுனர் , பார்வை மருத்துவர், ஊடு கதிர் இயக்கவியலாளர் போன்ற துணை மருத்துவ உதவியாளர்களும் கலந்து கொண்டு சேவை புரிந்தனர்.

# காஞ்சிபுரம் தெற்கு

## நகரும் மருத்துவ முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 41 | 63 |

இம்மருத்துவ குழுவினருக்கு உதவியாக ஆய்வக தொழில் நுட்ப வல்லுனர் , பார்வை மருத்துவர், ஊடு கதிர் இயக்கவியலாளர் போன்ற துணை மருத்துவ உதவியாளர்களும் கலந்து கொண்டு சேவை புரிந்தனர்.

இம் மருத்துவ முகாமிற்கு வருகை புரிந்து பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 63. பயனாளிகளுக்கு சேவை புரிந்திட வருகை புரிந்த சேவாதள தொண்டர்கள் எண்ணிக்கை 41 ஆகும். ஆய்வக பரிசோதனை ஊடுகதிர் பரிசோதனை கண் பரிசோ தனை ஆகிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 69 ஆகும்.

வந்திருந்த நோயாளிகளுள் ஒருவர் சவீதா பல் மருத்துவமனைக்கும் மற்றொருவர் சென்னை எழும்பூர் மகப்பேறுமருத்துவமனைக்கும் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப் பட்டனர். இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு வந்திருந்த அனைவருக்கும் பகவானின் பிரசாதமாக நாராயண சேவை வழங்கப் பட்டது.



# காஞ்சிபுரம் தெற்கு

## பாலவிகாஸ் குழந்தைகளின் ஆன்மீக சுற்று பயணம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**59**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**

பெருங்களத்தூர் சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் ஆன்மிக சுற்றுப்பயணமாக சுந்தரம் மற்றும் கிண்டி ஷீர்டி சாய் பாபா திருக்கோயிலுக்குச் சென்றனர்.

மதியம் **1:00** மணிக்கு சுற்றுப்பயணம் தொடங்கி, முதலில் சுந்தரம் திருக்கோயிலுக்குச் சென்று அங்கு ஸ்வாமியின் அறை, ஸ்வாமி அமர்ந்த ஊஞ்சல் ஆகியவற்றினை தரிசனம் செய்து, பின்னர் ஷீரடி சாய், கிருஷ்ணர் மற்றும் சாய் சுந்தரேஸ்வரர் சன்னதிகளையும் தரிசனம் செய்தனர். பின்பு ஸ்வாமி திருமுன் அமர்ந்து, ( வேதம் மற்றும் பஜனை செய்தனர்.

பின்பு **5:00** மணிக்கு கிண்டி ஷீரடி பாபா திருக்கோயில் வந்தடைந்தனர். இங்கும் மிக ஆர்வத்தோடும் பக்தியோடும் வேதம், பஜனை செய்தனர். பின்னர் அங்கிருக்கும் பிள்ளையார், நவக்ரஹம் மற்றும் சிவன் சன்னதிகளை தரிசித்தனர். பின்பு அங்கிருந்து புறப்பட்டு **8:00** மணிக்கு சமிதி வந்தடைந்தனர்



# காஞ்சிபுரம் தெற்கு

## மகிளா தின சகஸ்ரநாம அர்ச்சனை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
20

பயனைடைந்தோர் எண்ணிக்கை

கூடுவாஞ்சேரி சமிதியின் சார்பாக மூன்று இடங்களில் மகிளா தின சகஸ்ரநாம அர்ச்சனை நடைப்பெற்றது. மொத்தம் 20 மகளிர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ சத்ய சாய் உற்சவமூர்த்தி - பிராண பிரதிஷ்டை வைபவம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
15

பயனைடைந்தோர் எண்ணிக்கை
100

சமிதி அங்கத்தினர் மற்றும் சாய் பக்தர்கள் மூலம் ஸ்ரீ சத்ய சாயி வடிவில் உற்சவமூர்த்தி உருவாக்கப்பட்டு பிராண சக்தி ஏற்றும் வைபவம் ஏப்ரல் 23 அன்று நடைபெற்றது. காலை ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்தனம் மற்றும் பிரசாந்தி கொடி ஏற்றுதலில் தொடங்கி உற்சவமூர்த்திக்கு பிராண பிரதிஷ்ட்டை வைபவம் சிறப்பாக நடந்தேறியது. சங்கல்பம், ஹோமம் மற்றும் உற்சவமூர்த்திக்கு அபிஷேகம் நடைபெற்றது. பகவானுக்கு மகா மங்கள ஆரத்தியோடு வைபவம் நிறைவேறியது. சாய் அன்பர்கள் விழாவினில் திரளாக பங்கேற்று பகவானின் ஆசி மற்றும் அருட் பிரசாதத்தினைப் பெற்றனர். 100 க்கும் மேற்பட்டோருக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் தெற்கு

## மாத்ரு பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
63

பயனைடைந்தோர் எண்ணிக்கை

நம் அன்பிற்குரிய பகவான் பாபாவின் பிரியத்திற்குரிய தாயாரான மாதுஸ்ரீ ஈஸ்வராம்மா அவர்களின் நினைவு நாள் மே 6 ம் நாள் வருவதை ஒட்டி நம் ஸ்வாமி எவ்வாறு தன்னுடைய தாயை போற்றி மகிழ்ந்தாரோ அதுபோல நம் பாலவிகாஸ் குழந்தைகளும் தங்களுடைய பெற்றோர்களின் பாதங்களை பூஜித்து வணங்கும் நிகழ்ச்சியான "மாத்ரு பூஜா" என்னும் அருமையான நிகழ்ச்சி யினை இந்திரா நகர், தாம்பரம் சமிதி ஏப்ரல் 23ம் நாள் மிகச் சிறப்பாக
கொண்டாடியது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த 15 குழந்தைகள் தங்கள் பெற்றோர்களின் பாதங்களை நீரால் துடைத்து அவற்றிற்கு சந்தனம் குங்குமம் இட்டு மலர்களால் அர்ச்சித்து வணங்கி மகிழ்ந்தனர் . வணங்கிய தங்கள் குழந்தைகளை
பெற்றோர்கள் ஆசிகள் வழங்கி களிப்படைந்தனர். பின்னர் பெற்றோ ர்கள் அவர்தம் குழந்தைகள் சமிதி உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஸாயி சகஸ்ரநாம அர்ச்சனை
செய்தனர். இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனை வருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 11 பெற்றோர்களும் 15 குழந்தைகளும் கலந்து
கொண்டனர்.

# காஞ்சிபுரம் தெற்கு

## மாத்ரு பூஜை





# காஞ்சிபுரம் தெற்கு

## ஆராதனை தின மஹோத்ஸவம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
70

பயனைடைந்தோர் எண்ணிக்கை
786

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், பகவானின் ஆராதனை தினம் அனுசரிக்கப்பட்டது. காலை ஓம்காரம் சுப்ரபாதம் தொடங்கி, நாராயண சேவை மற்றும் பஜனை நடைபெற்றன. சில சமிதிகளில் ஞாயிறு அன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- கூடுவாஞ்சேரியில் இதனையொட்டி சிறப்பு நாராயண சேவை **3** இடங்களில் நடைபெற்றது. (இருளர் காலனி – **60**, பார்வையற்றோர் காலனி மறைமலைநகர் – **100**, சாலையோர ஏழை மக்கள் – **24**)
- பார்வதி நகரில், தத்தெடுக்கப்பட்ட செரப்பணஞ்சேரி மற்றும் கரசங்கால் கிராமத்தில் குடியிருக்கும் குடும்பத்திற்கு அமிர்தகலசம், நாராயண சேவை மற்றும் வஸ்தரதானம் (**98** வஸ்திரங்கள்) வழங்கப்பட்டன. கிராம மக்கள் மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு பகவானுக்கு நன்றி செலுத்தினர்.



# காஞ்சிபுரம் தெற்கு

## பாலவிகாஸ் மாணவர்களுக்கான பஜனை பயிலரங்கம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 19 | 40 |

பெருங்களத்தூர் பஜ்னைவிகாஸ் பயிலரங்கம் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. முதல் அமர்வில், பஜனை என்றால் என்ன, அது எதற்கு, மற்றும் அதன் அறிவியல் பயன்கள் பற்றி விளக்கப்பட்டது இரண்டாவது அமர்வில், பஜனை நமது வாழ்க்கையில் எப்படி ஒரு சிறந்த கருவியாக செயல்படுகிறது என்பதை பற்றியும் அதன் நுணுக்கங்கள் பற்றியும், நமது பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். இறுதியில் பஜனை வினாடி வினா நடைபெற்றது. அதனை தொடர்ந்து பகவானுக்கு மஹா மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டது.





# காஞ்சிபுரம் தெற்கு

## பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்ச்சி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 8 | 90 |

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு மாலை **4:00** மணிக்கு (எஸ் எஸ் எம் நகர்) பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. "நவவித பக்தி" பற்றி பாலவிகாஸ் மாணவர்கள் சிறப்பாக நடித்துக்காட்டினார்கள்.






# விழுப்புரம்

## மகிளா சாதனா ஷிபீர்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| | |

நமது விழுப்புரம் மாவட்டத்தின் சார்பாக **02/04/2023** அன்று மாவட்ட அளவிலான மகிளாஸ் சாதனா ஷிபீர் ஆன்மீக நிகழ்ச்சி விழுப்புரம் சமிதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமிற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதிகளில் இருந்தும் மகிளாஸ் பொறுப்பாளர்கள் & அங்கத்தினர்கள் சுமார் **55** மகிலாஸ் கலந்து கொண்டனர். காலை **08:00** மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் தொடங்கப்பட்டு ஓம்காரம், வேதபாராயணம், ஸ்ரீ சாய் பஜன் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து **Mrs.** மனோன்மணி அவர்கள் **SSS DSC** வரவேற்புரையும் தொடர்ந்து விழுப்புரம் **Miss.**அர்ச்சனா அவர்கள், **Mrs.**சாவித்திரி அவர்கள், **Mrs.**விஜயா, **SSS DMYL. Mrs.**செல்வி கண்ணம்மாள். **SSS DEC.** & உளுந்தூர்பேட்டை சமிதி **Mrs.**கௌரி அவர்கள், **Mrs.**பைரவி அவர்கள், **Mrs.**சாய் ப்ரியா ஆகியோர் பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற சாதனா சிபி நிகழ்ச்சியின் அடிப்படையில் சாதனா முகாமை முன்னெடுத்தனர். மேலும் இந்த முகாமில் கலந்து கொண்ட மகிளாஸ் அனைவரும் தங்கள் சூழ்நிலை மறந்து ஆனந்தமாக இருப்பதற்கு அவர்களுக்குள் விளையாட்டு & பஜன் பயிற்சியும் நடைபெற்றது.

விழுப்புரம்

## மகிளா சாதனா ஷிபீர்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | |

இந்த முகாமின் சிறப்பு:

இந்த முகாமில் கலந்து கொண்ட மகிலாஸ் அனைவரும் இந்த முகாமில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக வேறு எந்த சேவை பணிகளிலும் (உணவு & தேனீர்) ஈடுபடுவதை தவிர்க்கப்பட்டது. உணவு வழங்குதல்.தேநீர் தயாரிப்பு போன்ற அனைத்து சேவைகளையும் ஆண் சேவாதளத் தொண்டர்கள் முன்னெடுத்து செய்தனர்.

நிறைவாக மாவட்ட தலைவரின் வழிகாட்டுதல் மற்றும் வருகின்ற காலங்களில் முன்னெடுக்க வேண்டியதையை பற்றிய உரையும் அதைத்தொடர்ந்து மாலை **05:00** மணி அளவில் மகிலாஸ் அனைவரும் ஒன்றிணைந்து பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி எடுத்தனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த முகாமை விழுப்புரம் சமிதி பொறுப்பாளர்கள் சிறப்பாக முன்னெடுத்து ஏற்பாடு செய்தனர்.







# விழுப்புரம்

## கோடைகால மோர் பந்தல்

| | |
|---|---|
| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |

பகவானின் ஆசியுடன் நமது விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை & விழுப்புரம் சமிதிகளில் கோடைகாலம் முழுவதும் பொது மக்களுக்கு தினமும் மோர் வினியோகம் நடைபெற்று வருகிறது

## திருவிளக்கு பூஜை

| | |
|---|---|
| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |

விழுப்புரம் மாவட்ட விழுப்புரம் சமிதியில் **05/04/2023** அன்றும் கள்ளக்குறிச்சி சமிதியில் **19/04/2023** அன்றும் திண்டிவனம் சமிதியில் **15/04/2023** அன்றும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது.



# விழுப்புரம்

## கண் பரிசோதனை முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 25 | 107 |

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை சமிதியும் & கோவை சங்கரா கண் மருத்துவ மனையும் இணைந்து நடத்திய கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. மொத்த பயனாளிகள் **107** (ஆண் **52**,பெண் **55**) மேல் சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் **41**(ஆண் **20**.பெண் **21**) சேவா தொண்டர்கள் ஆண் **12** , மகிளா **13** கலந்து கொண்டனர். முகாமில் அனைவருக்கும் நாராயணசேவை வழங்கப்பட்டது. நிறைவாக பகவானுக்கு மகாமங்கள ஆரத்தியுடன் முகாம் இனிதே நிறைவு பெற்றது..







# விருதுநகர்

## நீர் மோர் பந்தல்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
15

பயனைடைந்தோர் எண்ணிக்கை
1500

விருதுநகர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சார்பாக ஸ்ரீ பாராசக்தி மாரியம்மன் பங்குனி பொங்கலை முன்னிட்டு அக்னிசட்டி திருவிழா **03/04/2023** திங்கள் அன்று தெப்பம் மேற்கு புறம் உள்ள இந்து நாடார் நளபாக அலுவலகத்தில் வைத்து காலை **8** மணி முதல் மதியம் **11** மணி வரை நீர் மோர் வழங்கும் சேவை சிறப்பாக நடைபெற்றது. அதில் **15** சேவாதளர்கள் கலந்துகொண்டனர். மொத்த பயனாளிகள் **1500.**

## ஆராதனா மஹோத்ஸவம் - நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
27

பயனைடைந்தோர் எண்ணிக்கை
700

சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சார்பில் ஆராதனா மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை **11** மணி முதல் **2** மணி வரை நாராயண சேவை **700** நபர்களுக்கு வழங்கப்பட்டது





விருதுநகர்

# 2வது தத்தெடுத்த கிராமத்தில் துவக்கவிழா

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 15 | 150 |

ஸ்வாமியின் பேரருளால் **04.04.2023** பங்குனி உத்திரத்தன்று இராஜபாளையம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் **2**வது தத்தெடுத்த கிராமமாக தெற்கு வெங்காநல்லூர் பஞ்சாயத்தை சார்ந்த **ESI** காலனியில் துவக்கவிழா நிகழ்ச்சி சாயி பஜன் மற்றும் குத்துவிளக்கு பூஜையுடன் ஆரம்பிக்கப்பட்டது. கிராம மக்கள் அனைவரும் ஆர்வமுடன் கலந்துகொண்டு பாலவிகாஸ் வகுப்புகளை துவக்க வேண்டினார்கள்.





# விருதுநகர்

## ஆராதனா மஹோத்ஸவம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 60 | 110 |

இராஜபாளையம் ஸ்ரீசத்ய சாயி சேவா சமிதி சார்பில் ஸ்ரீ சத்ய சாயி ஆராதனா மஹோத்ஸவம் காலை **5.20**க்கு ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனம் மற்றும் சர்வதர்ம கொடியேற்றி **10 to 12** மணி வரை மகிளா பிரிவின் சார்பில் **panel discussion 12** தலைப்புகளில் நடத்தப்பட்டு சாயி பஜன், நாராயண சேவை மற்றும் அமிர்தகலசம் வழங்கப்பட்டது. மாலை **6** மணிக்கு முன்னால் பாலவிகாஸ் மாணவியின் பஞ்சரத்தன கீர்த்தனை **7** மணிக்கு **youth mahilas** சார்பில் ஸ்ரீ சத்ய சாயி சங்கீத சமர்ப்பணம் மற்றும் **8** மணிக்கு ஆரத்தியுடன் விழா நிறைவடைந்தது.







# கன்னியாகுமரி

## கண் சிகிச்சை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
18

பயனடைந்தோர் எண்ணிக்கை
189

கன்னியாகுமரி மாவட்டத்தில், இலவச கண் சிகிச்சை முகாம் **02/04/2023** அன்று நடத்தப்பட்டது. சுமார் **189** வெளி நோயாளிகள் பயனடைந்தனர். இதில் **82** பேர் ஆண் மற்றும் **107** மகிளாக்கள் பயனடைந்தனர். **14** மருத்துவமனை ஊழியர்கள், ஒரு டிரைவர், ஒரு ஒருங்கிணைப்பாளர், இரண்டு மருத்துவர்கள், மற்றும் **24** ஆண் தொண்டர்கள் மற்றும் **4** மகிளாக்கள் இந்த சேவையில் கலந்து கொண்டனர்.



Free Eye Camp SSSSO Kanyakumari district

Theni

# ஸஹஸ்ர நாமாவளி அர்ச்சனை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
7

பயனைடைந்தோர் எண்ணிக்கை

**24/4/23** திங்கள்கிழமை பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபா ஆராதனை முன்னிட்டு கே கே பட்டி சமிதி ஸஹஸ்ர நாமாவளி நடைபெற்றது இதில் ஆண்கள் **1**,பெண்கள் **6** மொத்தம் கலந்த கொண்டமேம்பர் **7**





# கோயமுத்தூர்

## சாய் குடும்ப சங்கமம் நிகழ்ச்சி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**50**

பயனடைந்தோர் எண்ணிக்கை
**50**

சுவாமியின் எல்லையற்ற தெய்வீக அருளுடனும், ஆசியுடனும் கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி சமிதியைச் சேர்ந்த **50** பக்தர்கள் சாய் கைலாஸ், நீலகிரியில் சாய் குடும்ப சங்கமம் நிகழ்ச்சியை சென்ற **02.04.2023** கொண்டாடினார்கள்.

இரண்டு மணிநேர பஜனையை நமது பகவானின் திவ்ய தாமரை பாதங்களில் சமர்பித்தார்கள்.





# கோயமுத்தூர்

## 12வது ஆண்டு ஸ்ரீ சுந்தரகாண்ட பாராயண வைபவம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**100**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**100**

கோவை மாவட்டம், ஆர் எஸ் புரம் சமிதி யின் 12வது ஆண்டு ஸ்ரீ சுந்தரகாண்ட பாராயண வைபவம் சென்ற ஏப்ரல் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை மிக சிறப்பாக நடைபெற்றது.இதில் 6, 7 மற்றும் 8 ஏப்ரல் 2023 காலை வேதமந்திரம், ஸ்ரீ ராமர் ஜனனம், சீதா ஜனனம் & விவாகம் மற்றும் சுந்தரகாண்டம் பாராயணம் நடைபெற்றது.

ஏப்ரல் 9, 2023 ஞாயிற்றுக்கிழமை வேதபாராயணம், விஷ்ணு சஹஸ்ரநாமம், சாயி சஹஸ்ரநாமம், ஸ்ரீ ராம பட்டாபிஷேகம், ஸ்ரீ ரகுவீர காத்யம் ராம கீதம், சொற்பொழிவு, சாய் பஜன், ஹனுமான் சாலீசா மற்றும் பாலவிகாஸ் மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பின் ஸ்வாமிக்கு மஹா மங்கள ஆரத்தியுடன் வைபவம் இனிது நிறைவேறியது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட சுமார் 100 க்கும் மேற்பட்டவர்கள் பங்கு கொண்டார்கள்.



# கோயமுத்தூர்

## ஸ்ரீ சாய் லட்சார்ச்சனை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 75 |

ஸ்வாமியின் பெருங்கருணையினால் சென்ற **9/4/23** அன்று கோயம்புத்தூர் மாவட்டம், ஸ்ரீராம் நகர் சமிதியில் ஸ்ரீ சாய் லட்சார்ச்சனை நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. லட்சார்ச்சனையில் போத்தனூர், மாச்சம்பாளையம், குனியம்புத்தூர் சமிதி பக்தர்கள் பங்கேற்றனர். விழாவில் பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் உட்பட **75**க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்

## திருக்கோவிலில் சேவைப்பணி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 22 | 75 |

பகவானின் அருளினால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி உறுப்பினர்கள்
கோவை அருள்மிகு ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆண்டவர் திருக்கோவிலில் கூட்டத்தை கட்டுப்படுத்துதல், போக்குவரத்து சீர்படுத்துதல் மற்றும் மக்காத பிளாஸ்டிக் பொருட்களை பக்தர்களிடமிருந்து பிரித்தெடுத்தல் போன்ற சேவைப் பணிகளை சென்ற இரு வாரங்கள் - சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் **(1, 2, 8, 9.4.2023)** மேற்கொண்டார்கள்.
சுமார் **22** சேவாதல்கள் - இளைஞர் - ஆண்கள் பங்கு கொண்டார்கள்.

# கோயமுத்தூர்

## சாய்பாபா காலனி சமிதியின் 33வது ஆண்டுவிழா

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 7 | |

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் சாய்பாபா காலனி சமிதியின் **33**வது ஆண்டுவிழா சென்ற ஏப்ரல் **9, 2023** ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக (பொது இடத்தில் – திருமண மண்டபத்தில்) கொண்டாடப்பட்டது. காலை **8.30** மணியளவில் ஸ்வாமியின் அன்பு விளக்கு ஏற்றப்பட்டு பின் பாலவிகாஸ் பழைய மாணவர்களின் வேதமந்திரங்கள் மற்றும் பஜனைகளுடன் விழா துவங்கியது. சமிதியின் ஆண்டறிக்கை சமர்பிக்கப்பட்டது. பாலவிகாஸ் குழந்தைகள் **3** குழுக்கள் உட்பட **17** கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்கள். கிராம பாலவிகாஸ் மற்றும் தத்தெடுக்கப்பட்ட பள்ளி பாலவிகாஸ் மாணவர்களும் இதன் ஒரு பகுதியாக இருந்தனர். கடந்த ஆண்டு பாலவிகாஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஸ்வாமிக்கு மகா மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு பின் பக்தர்களுக்கு மஹாபிரசாதம் வழங்கப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.



# கோயமுத்தூர்

## ஸ்ரீசத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**11**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**46**

சாய் ராம்

**09-04-2023** காலை **10:00 to 02:00 PM** மணி வரை.

**2.** ஸ்ரீசத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்.

**3.** கோயமுத்தூர் மாவட்டம். சாய் பாபா காலணி சமிதி. தத்துகிராமம். வரப்பாளையம்.

**4.** பங்கேற்றவர்கள்.

மருத்துவர்கள் = **2**

பேராமெடிக்கல்= **5**

சேவாதள்

தொண்டர்கள்.= **4**


பயனாளிகள் = **46**

ஆண்கள் = **13**

பெண்கள் = **31**

குழந்தைகள் = **2**

**5.** சாய் ராம் பகவான் ஸ்ரீசத்ய சாய்யின் பரிபூரண ஆசியுடன் **09-04-2023** ஞாயிறு கிழமை காலை **10:00 to 02:00 PM** மணி வரை மாதாந்திர இலவச பொது மருத்துவ முகாம் சாய் பாபா காலணி சமிதி- தத்து கிராமம்- வரப்பாளையம் கிராமம். மிகசிறப்பாக நடைபெற்றது





## கோயமுத்தூர்

# ஸ்ரீ சத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 8 | 12 |

**1.** நாள் **09-04-2023** மதியம் **03:00 to 05:00 PM** மணி வரை.
**2.** ஸ்ரீசத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்.
கோயமுத்தூர் மாவட்டம்.
குப்பநாயக்கன்பாளையம் சமிதி.
நடைபெற்ற இடம்
சமிதி வளாகம்.
**4.** பங்கேற்றவர்கள்.
**1.** மருத்துவர்கள் = **2**
**2.** பேராமெடிக்கல் = **5**
சேவாதள்
தொண்டர்கள் = **1**
பயனாளிகள் = **12**
ஆண்கள் = **6**
பெண்கள் = **6**

**5.** சாய் ராம் பகவான் ஸ்ரீசத்ய சாய்யின் பரிபூரண ஆசியுடன் **09-04-2023** ஞாயிற்று கிழமை மதியம் **03:00 to 05:00 PM** மணி வரை மாதாந்திர இலவச பொது மருத்துவ முகாம் குப்பநாயக்கன்பாளையம் சமிதி வளாகத்தில் மிகசிறப்பாக நடைபெற்றது.





# கோயமுத்தூர்

## இலவச பல் சிகிச்சை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பகவானின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம், ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி பொள்ளாச்சி மற்றும் ஆர்.வி.எஸ் பல் மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை, சூலூர் இணைந்து இலவச பல் சிகிச்சை முகாம் சென்ற **09.04.2023** அன்று சமிதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை **8** மணிக்கு துவங்கிய இந்த முகாமானது நண்பகல் **1** மணி வரை நடைபெற்றது. இதில் பெருமளவில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.





# கோயமுத்தூர்

## நீர் மோர் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
247

பகவானின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி சமிதி சார்பாக சென்ற **1.4.2023** முதல் **10.4.2023** வரை **10** நாட்களுக்கு நீர்மோர் வழங்கும் சேவை வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த **10** நாட்கள் சேவையில் மொத்தம் **247** சேவாதள தொண்டர்கள் (ஆண் கள் – **98,** மகிளாக்கள் **133 &** பாலவிகாஸ் மாணவர்கள் **16** பேர்கள்) கலந்து கொண்டார்கள்.

## பால விகாஸ் குழந்தைகள் - நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
5

பயனைடைந்தோர் எண்ணிக்கை
35

பகவானின் பெரும் கிருபையினாலே கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதிகள் மூலமாக , தமிழ் புத்தாண்டை முன்னிட்டு **(14/04/2023)** பால விகாஸ் குழந்தைகள் மூலம் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் நாராயண சேவை நடைபெற்றது.

பங்கேற்றவர்கள்
பால விகாஸ் மாணவர்கள் **: 5**
பயனாளிகள் **: 35**
ஆண் சேவாதளர்கள்**: 2**
மகளிர் சேவாதளர்கள் (குரு) **: 2**



# கோயமுத்தூர்

## ஸ்ரீ சத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
14"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
12"

சாய் ராம் பகவானின் பரிபூரண ஆசியுடன் **16-04-2023** ஞாயிற்றுக்கிழமை காலை **09:00 to 11:00 AM** வரை மாதாந்திர இலவச பொது மருத்துவ முகாம் குனியமுத்தூர் சமிதி வளாகத்தில் மிகசிறப்பாக நடைபெற்றது.

பங்கேற்றவர்கள்.

**1.** மருத்துவர்கள் = **2**

**2.** பேராமெடிக்கல் = **6**

**3.** சேவாதள் தொண்டர்கள் = **6**

**4.** பயனாளிகள் = **12**

ஆண்கள் = **7**

பெண்கள் = **5**

## ஸ்ரீ சத்ய சாய் இலவச பொது மருத்துவ முகாம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
12"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
69"

ஸ்வாமியின் பரிபூர்ண ஆசியுடன் **16-04-2023** ஞாயிற்று கிழமை காலை **11:45 to 2:30 PM** வரை மாதாந்திர இலவச பொது மருத்துவ முகாம் கோயம்புத்தூர் மாவட்டம், கணபதி சமிதியின் சார்பாக அஞ்சுகம் நகரில் உள்ள விநாயக ர் கோயில் வளாகத்தில் மிகசிறப்பாக நடைபெற்றது.

பங்கேற்றவர்கள்.

**1.** மருத்துவர்கள் = **2** **2.** பேராமெடிக்கல் = **5**

**3.** சேவாதள் தொண்டர்கள். ஆண்கள் = **4** , பெண்கள் = **1**

**4.** பயனாளிகள் = **69** ஆண்கள் = **23** , பெண்கள் = **46**

# கோயமுத்தூர்

## நீர் மோர் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனடைந்தோர் எண்ணிக்கை

நமது அன்புக்குரிய பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் தெய்வீக அன்புடனும் ஆசீர்வாதத்துடனும், கோயம்புத்தூர் மாவட்டம், சாய்பாபா காலனி சமிதி, ஏப்ரல் **17**ம் தேதி **2023** முதல் **N.S.R.** சாலையில் நீர் மோர் வழங்கும் சேவையை தொடங்கியது.

## பிரசாந்தி சேவா சாதனா முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை **110**

பயனடைந்தோர் எண்ணிக்கை **110**

சுவாமியின் அருளால் "பிரசாந்தி சேவா சாதனா முகாம்" - **16.04.2023** அன்று கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் சிறப்பாக நடைபெற்றது. தத்தெடுக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் **33** பேர்கள் உட்பட சுமார் **110** பக்தர்கள் - ஆண்கள் **(59)** மற்றும் மகிளாஸ் **(51)** இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.





# கோயமுத்தூர்

## மகிளா மருத்துவ முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை 28**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை 48**

சாய் ராம் பகவான் ஸ்ரீ சத்ய சாய்யின் பரிபூரண ஆசியுடன் **19-04-2023** புதன் கிழமை காலை **09:00 to 02:00 PM** மணி வரை மகளிர் பொது மருத்துவ முகாம் கோவை ரேஸ் கோர்ஸ் சமிதியில் மிகசிறப்பாக நடைபெற்றது.







திருச்சி

# காலை சிற்றுண்டி சேவையின் ஆண்டு விழா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

சாய்ராம் கல்லுக்குழி சமிதி சார்பில் பக்த தாயுமானவர் நடுநிலைப்பள்ளியில் காலை சிற்றுண்டி சேவையின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஏழை மற்றும் பட்டினியால் வாடும் மாணவர்களுக்கு காலை உணவின் முக்கியத்துவத்தை பள்ளித் தலைமையாசிரியர் எடுத்துரைத்தார். மேலும் பள்ளிக் குழந்தைகள் காலை உணவைப் பெறுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதை விவரித்தார். .அனைத்து நாட்களிலும் குழந்தைகளுக்குப் பலவகையான உணவுகள் வழங்கப்பட்டன. காலை உணவு குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் கல்வியில் கவனம் செலுத்தும் திறனையும் மேம்படுத்துகிறது. ஏப்ரல் 20ஆம் தேதி மாவட்டத் தலைவர் கட்டுரைப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு டாக்டர் ரமாதேவி (SEC) புடவைகளை வழங்கினார். இரண்டு மாணவர்கள் ஒவ்வொரு நாளும் வழங்கப்படும் உணவுகள் குறித்து பேசினர். தங்களுக்கு சூடான மற்றும் சுவையான உணவுகள் வழங்கப்பட்டதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். தலைமை ஆசிரியை நன்றி கூறினார். சுவாமியின் பிரசாதமாக வழங்கப்பட்டதை பள்ளி மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதாக குறிப்பிட்டார்.

# காலை சிற்றுண்டி சேவையின் ஆண்டு விழா









# திருச்சி

## கோடை நீர் மோர் பந்தல்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
4

பயனைடைந்தோர் எண்ணிக்கை
150

நமது சாய் அன்னையின் பெருங்கருனையினால் ,ஸ்ரீரங்கம் ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில்,மார்ச் 22 தொடங்கி தினசரி 10 லிட்டர் நீர் மோர் வழங்கப்படுகிறது.இந்த சேவையில் அனைத்து சமிதியில் இருந்தும் சேவாதள தொண்டர்கள் பங்குபெறுகின்றனர்.

## சுவாமி ஆராதனை தினம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
500

சுவாமி ஆராதனை தினத்தை முன்னிட்டு 23.4.2023 அன்று பாலக்குறிச்சியில் SEC டாக்டர்.ரமாதேவி குத்துவிளக்கு ஏற்றி பால்விகாஸ் நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.
வேத பாராயணத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.சுவாமி வாசகத்துடன் பாலவிகாஸ் குழந்தை சிறு உரை நிகழ்த்தினார்.நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக பாலவிகாஸ் குருக்கள் வில்லுப்பாட்டு நடத்தினர்.
சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் போது பல பஜனைகள் பாடினர்.பாலவிகாஸ் குழந்தைகள் "செப்பினட்டு நாடகம்" நடத்தினர். மாவட்ட தலைவர் தனது உரையில் பால்விகாஸின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சுவாமிக்கு மஹா ஆரத்தி மற்றும் கிராம மக்களுக்கு நாராயண சேவையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.சுமார் 500 பேர் கலந்து கொண்டனர்.

## திருச்சி

# சுவாமி ஆராதனை தினம்








# திருச்சி

## மாவட்ட அளவிலான மகிளா முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனடைந்தோர் எண்ணிக்கை 90

மாவட்ட அளவிலான மகிளா முகாம், 79 மகிளாக்கள் பங்கு பெற்றனர் உடன் குரூப் -2,2023 தேர்ச்சி & மாவட்ட கட்டுரைப் போட்டி.-மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள்




## நீர் மோர், பானகம் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனடைந்தோர் எண்ணிக்கை

புதுக்கோட்டை மெயின் சமிதி பாலவிகாஸ் மாணவர்கள் பானகம் தயாரிக்க வெல்லம் உடைத்து சேவை, குடிநீர் சேவை &ஆராதனை தினத்தினை முன்னிட்டு காலை நிகழ்ச்சி

## திருச்சி

# ஸ்ரீ சத்ய சாய் மற்றும் சர்வதேவதா ஹோமம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | |

நமது ஸ்வாமியின் சங்கல்பத்தினால் ஆன்மீக மையத்தில் ,ஆராதனை தினத்தை முன்னிட்டு காலை ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனத்துடன் ஸ்ரீ சத்ய சாய் காயத்ரி ஹோமம் மற்றும் சர்வதேவதா ஹோமத்தை சென்னை திரு வேதம் J.ஸ்ரீனிவாசன் அவர்களால் நடத்திவைக்கபட்டது.அதனை தொடர்ந்து ஸ்வாமியின் திருவுருவத்திற்கு அபிஷேக ,ஆராதனை மற்றும் சகஸ்ரநாமம் அர்ச்சனையும் & நாராயன சேவையும் வழங்கப்பட்டது.








திருச்சி

## பாலவிகாஸ் பயிற்சி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

குரூப் -1, புத்தாக்கப் பயிற்சி & குரூப் -2, சான்றிதழ் வழங்குதல் நடைபெற்றது.



## ஷீரடி சாய் சத்யசாய் அபிஷேகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

புதுக்கோட்டை மெயின் சமிதி ஆராதனா மாகோத்ஸவம் **23.04 2023.** பாலவிகாஸ் மாணவர்கள் :ஷீரடி சாய் சத்யசாய் அபிஷேகம் செய்தனர்.







திருச்சி

# மலையப்பநகர் நரிகுரவ காலனியில் சுவாமி ஆராதனை நாள்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
7

பயனைடைந்தோர் எண்ணிக்கை

ஆராதனை தினத்தன்று நரிகுரவப் பிள்ளைகள் மிகவும் உற்சாகமாக அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு ஸ்வாமி பஜனைப் பாடி காலனியை வலம் வந்தனர். அவர்களை நரிகுரவ காலனி மக்கள் உற்சாக வரவேற்பு அளித்து, பகவானுக்கு ஆரத்தி எடுத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மாலை 4.30 மணியளவில் பால்விகாஸ் குழந்தைகளின் வேதமந்திரங்கள் மற்றும் பஜனைப் பாடல்களுடன் விழா தொடங்கியது. .நூற்றுக்கணக்கான BV குழந்தைகள் ஒரே மாதிரியான ஸ்லோகங்களை முழக்கமிட்டனர், இது ஒரு முன்மாதிரியான செயல்திறன். அவர்களில் மூவர் சுவாமியின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில சம்பவங்களைப் பற்றி பேசினர். நிகழ்ச்சியின் சிறப்பம்சம் நாடகம். முதல் குழு BV குழந்தைகள் பிரார்த்தனா நாடகத்தை நடத்தினர். பங்கேற்பாளர்களுக்கு சிறு பரிசுகளை விநியோகித்து மாவட்ட தலைவர் திரு.B.V.ரமேஷ் இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.பிரார்த்தனை மற்றும் தியானத்தை எளிய உதாரணங்களுடன் விளக்கினார்.பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி மற்றும் குழந்தைகளுக்கு நாராயண சேவையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. முழு நிகழ்ச்சியையும் மாவட்ட வேத ஒருங்கிணைப்பாளரும் பி.வி.குருவுமான டாக்டர்.ஜெயலட்சுமி.எஸ்எஸ்விஜபி ஒருங்கிணைப்பாளர் திரு.பாஸ்கர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். , பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி

# மலையப்பநகர் நரிகுரவ காலனியில் சுவாமி ஆராதனை நாள்









# திருச்சி

## விழிப்புணர்வு செயல் திட்டம் ஆலோசனை வகுப்பு

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 53 |

ராஜா உயர்நிலைப்பள்ளி –விடுமுறை விழிப்புணர்வு செயல் திட்டம் ஆலோசனை வகுப்பு. பங்கு பெற்ற மாணவர்கள் **:53,** நாராயண சேவையும் நடைபெற்றது.





# திருச்சி

## மாணவர்களுக்கு புத்தாடை வழங்குதல்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| | 24 |

கிருஷ்ணா ஹோமில், பிக்க்ஷண்டார் கோவில் சமிதி ,பாலவிகாஸ் ஈஸ்வராம்பா வாரம் தொடக்கம் முன்னிட்டு **28.04.2023.** பாலவிகாஸ் மாணவர்களுக்கு , புத்தாடை வழங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது. பயனாளிகள் :20 மாணவர்கள்,4 மாணவிகள். மாணவர்களின் பஜன், & சிறப்பு விருந்தினர் திரு. அசோக் சுந்தரேசன் அவர்களால் பஞ்சமாதக்களின் முக்கியத்துவம் கூறப்பட்டது.







திருச்சி

# அடிப்படை தேவைகள் நிறுவுதல்

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை”

பிக்ஷாண்டார் கோவில் சமிதி :
ராஜா உயர்நிலைப்பள்ளி **6.7. &8** ஆம் வகுப்பறைகளுக்கு **3** மின்விசிறிகள் **31.03.2023**-ல் **கே. கே.** நகர் சமிதி தொண்டர்களால் வழங்கப்பட்டு,**15.04.2023**- ல் பொருத்தப்பட்டது.)

# பள்ளி ஆசிரியர்களுக்கு குரூப் -1 பயிற்சி

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை **40**”

பள்ளி ஆசிரியர்களுக்கு குரூப் **-1** பயிற்சி நாள் **: 29.04.2023.**
இடம் **:**சாய் வித்யாலயா( **CBSC)** லால்குடி**,** திருச்சி மாவட்டம்**.**
பங்கேற்றவர்கள் **:**
**1.** திரு**.** விஜய் கிருஷ்ணன் மாநில துணைத்தலைவர்**,**
**2. Dr.** ரமாதேவி**,** மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர்**,**
மற்றும் பயிற்சியாளர்களாக-திருச்சி மாவட்ட ஆன்மிக**,** வாசக வட்ட**,** கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் **&** விழுப்புரம் கல்வி ஒருங்கிணைப்பாளர்**,**
பள்ளி தாளாளர்**,** பிரின்சிபால்**,** மற்றும் சமிதி அங்கத்தினர்**.**
பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் **-40.**

# திருச்சி

## யோக பயிற்சி மற்றும் அமிர்த கலசம் வழங்குதல்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**100**

பகவானின் அருளாசிகளுடன் எச்ஐவி பாதித்த குழந்தைகளின் **100** குடும்பங்களுக்கு ஸ்வாமியின் ஆராதனை தினத்தை முன்னிட்டு **23.04.23** அன்று யோக பயிற்சி மற்றும் அமிர்த கலசம் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்க வந்த குழந்தைகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கு சுண்டல் மற்றும் மோரும், முகாம் நிறைவில் அனைவருக்கும் சுவையான மதிய உணவு நமது சேவாதள தொண்டர்களால் இன்முகத்துடன் பரிமாறபட்டது.





# திருச்சி

## ஆராதனை மகோத்ஸவம் - நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
30

பயனைடைந்தோர் எண்ணிக்கை
1000

**24/4/23** திங்கள்கிழமை பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபா ஆராதனை முன்னிட்டு கே கே பட்டி சமிதி ஸஹஸ்ர நாமாவளி நடைபெற்றது. இதில் ஆண்கள் **1,** பெண்கள் **6** கலந்த கொண்டனர் .

## கண் சிகிச்சை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
119

ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் சாலையில் உள்ள கோனார் சத்திரத்தில், இந்து மிஷன் மருத்துவமனை மற்றும் கோவை சங்கர் நேத்தாரலயா கண் மருத்துவமனையின் உடன் இணைந்து மெகா கண் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமில் **119** நோயாளிகள் பங்கேற்றனர். கண்புரை அறுவை சிகிச்சைக்கு **54** நோயாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். ஸ்ரீரங்கம், தில்லை நகர், & கல்லுக்குழி சமிதி சேவாதளர்கள் சேவை செய்து முகாமை வெற்றியடையச் செய்தனர். அனைவருக்கும் மோர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# தர்மபுரி

## மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பொது மருத்துவ சேவை, தோலியல், எலும்பியல் மற்றும் பல் மருத்துவ சேவைகள்நடந்தன. பயன் பெற்றோர்- **260.** நீரிழிவு நோய்க்கான ரத்தப் பரிசோதனையும் தேவையானவர்களுக்காக செய்யப்பட்டது அரவிந்த் கண் மருத்துவமனை சேர்ந்த வல்லுனர்கள் கண் பரிசோதனை செய்தனர் இதில் பயனடைந்தோர் எண்ணிக்கை **174** கண்அறுவை சிகிச்சைக்காக தேர்வு செய்யப்பட்டோர் எண்ணிக்கை **39**







# தர்மபுரி

## மஹிளா சாதனா ஷிபிர்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பகவானின் அருளோடு மஹிளா சாதனா ஷிபிர் ஓசூர் மெயின் சமிதி இல் நடைபெற்றது பிரசாந்தி நிலையத்தில் உரையாற்றிய அனைத்து சொற்பொழிவுகளை பற்றியும் இங்கு எடுத்துரைத்தனர். கலந்து கொண்டோர் எண்ணிக்கை : தருமபுரி **25** ஓசூர் **30** கிருஷ்ணகிரி **20**
வேப்பன்னபள்ளி **14**
கேளமங்கலம் **4**
சென்னசமுத்திரம் **4**
தலி **3**




தர்மபுரி

# பகவானின் ஆராதனை மஹோத்ஸவம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

புதிய பஜனை மண்டலி - சாய் லட்சுமி கிருபா சேத்திர பஜனை மண்டலி சப்பாணிப்பட்டி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துவங்கப்பட்டது. நிகழ்ச்சிகள்

காலை 6 மணிக்கு சகஸ்ர மோதக கணபதி ஓமம்

11 மணி பஜனா மண்டலியில் துவக்கம்

11 :30 பஜனைகள்

1:00மணி மகா மங்கள ஆரத்தி

1:45 நாராயண சேவை 200 பேருக்கு









தர்மபுரி

# நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

தர்மபுரி சமிதி , **23- 4- 2023** அன்று காலை **7** மணிக்கு துவங்கிய லக்ஷார்ஜனை மாலை **3** மணி அளவில் முடிந்தது இதில் முதியோர் இல்லத்தை சேர்ந்தவர்கள், கருணை இல்லத்தை சேர்ந்தவர்கள் மற்றும் தொழு நோயாளிகளுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது பயன் பெற்றோர் எண்ணிக்கை **600**









# நீலகிரி

## டி. ஓரநள்ளி ஊரில்  மோர் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
1500

டி.ஓரநள்ளி ஊரில் மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு **1500** பக்தர்களுக்கு **04-04-2023** அன்று டி ஓரநள்ளி சமிதியின் மூலம் மோர் விநியோகிக்கப்பட்டது.




## மாவட்ட சேவாதள பயிற்சி முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை
90

மாவட்ட அளவிலான சேவாதளப் பயிற்சி முகாமில் **42** ஆண்களும் **48** மகளிரும் கலந்துகொண்டனர். மாநில சேவை இணை ஒருங்கிணைப்பாளர் திரு ராஜன், முன்னாள் தேனி மாவட்ட தலைவர் திரு பாலு மற்றும் திருப்பூர் மாவட்ட திரு வெங்கட் அவர்களும் பயிற்சி அளித்தனர்.




# நீலகிரி

## சாய்கைலாஸ் மந்திருக்கு மாணவர்களின் விஜயம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை

பயனைடைந்தோர் எண்ணிக்கை

பகவானின் அருளால் **7-4-2023** அன்று காலை சாய் கைலாஸ் மந்திரில் வேத பாராயணம் மற்றும் பாஜனை நடைபெற்றது. பகவான் படத்திலிருந்து சுமார் ஒரு கிலோ விபூதி வந்திருந்தது. மதிய உணவுக்குப் பின் சுமார் **40** கி மீ தொலைவில் அமைந்துள்ள நெடுகல்கொம்பை என்னும் பழங்குடி கிராமத்திற்கு சென்று நகர்சங்கீர்த்தனம் செய்யப்பட்டது. மேலும் அங்குள்ள **144** பேருக்கு மதிய உணவு, சாய் புரோட்டீன், பழங்கள் மற்றும் **144** கம்பளிகள் வழங்கப்பட்டன.

மாலை **6** மணியளவில் அங்கிருந்து மேலூர் ஒசஹட்டி சமிதிக்கு (பகவான் விஜயம் செய்த கிராமம்) சென்று பஜன் மற்றும் சத்சங்கம் செய்யப்பட்டது.

மறு நாள் **8-4-2023** காலை சாய் கைலாசில் மியூசிக் புரோக்ராம் நடத்தப்பட்டது. உணவுக்குப்பின் பெண்களுக்கு ஸ்கில் ட்ரைனிங் அளிக்கப்பட்டது. ஜெய் சாய்ராம்.





# நீலகிரி

## மாரியம்மன் கோவில் - உணவு விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
55

பயனைடைந்தோர் எண்ணிக்கை
5000

எத்தையம்மன் தேர்திருவிழாவை முன்னிட்டு உதகை மாரியம்மன் கோவிலில் **5000** பேருக்கு அன்னதான விநியோகம் நடந்தது.**25** ஆண் மற்றும் **30** பெண் சேவாதளர்கள் கலந்து கொண்டனர்.





# கரூர்

## கரிஷ்யே வசனம் தவ - ஆன்மீக சாதனை முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**5**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**35**

ஓம் ஸ்ரீ சாய் ராம். கரூர் மாவட்டத்தில் **02.04.2023** ஆம் தேதி, கரிஷ்யே வசனம் தவ என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான ஆன்மீக சாதனை முகாம் நடைபெற்றது, இந்த ஆன்மீக சாதனா முகாமை மாநில ஆன்மீக ஒருங்கிணைப்பாளர் திரு.s.கணபதி சாய்ராம் அவர்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி.சரஸ்வதி சாய்ராம் ஆகியோர் வந்து சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். இதில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் **14 ,** பெண்கள் **13,** இளைஞர்கள் **8** என **35** நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்,



# கரூர்

## கரிஷ்யே வசனம் தவ - ஆன்மீக சாதனை முகாம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
5"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
35"

ஓம் ஸ்ரீ சாய் ராம். கரூர் மாவட்டத்தில் **02.04.2023** ஆம் தேதி, கரிஷ்யே வசனம் தவ என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான ஆன்மீக சாதனை முகாம் நடைபெற்றது, இந்த ஆன்மீக சாதனா முகாமை மாநில ஆன்மீக ஒருங்கிணைப்பாளர் திரு.s.கணபதி சாய்ராம் அவர்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி.சரஸ்வதி சாய்ராம் ஆகியோர் வந்து சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். இதில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் **14** , பெண்கள் **13,** இளைஞர்கள் **8** என **35** நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்,





# கரூர்

## நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
10

பயனடைந்தோர் எண்ணிக்கை
30

ஓம் ஸ்ரீ சாய்ராம். கரூர் மாவட்டத்தில் **16.04.2023** ஆம் தேதி சணப்பிரட்டி சக்தி மனவளர்ச்சி குன்றியோருக்கான பயிற்சி இல்லத்தில் நாராயண சேவை செய்யப்பட்டது.

## ஜூஸ் சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
19

பயனடைந்தோர் எண்ணிக்கை
1500

ஓம் ஸ்ரீ சாய்ராம். கரூர் மாவட்டத்தில் **22.04.2023** ஆம் தேதி ரமலான் பண்டிகை முன்னிட்டு திருமாநிலையூர் மைதானத்தில் தொழுகையில் ஈடுபட்டு தொழுகையை முடித்து வந்த சுமார் **1500** முஸ்லிம் சகோதரர்களுக்கு ரம்ஜான் வாழ்த்துக்கள் தெரிவித்து அவர்களுக்கு ஜூஸ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் **5** ஆண்கள் , **5** இளைஞர்கள், **6** மகிளாஸ், **3** யுவதிகள் ஒரு பால விகாஸ் குழந்தை ஆக மொத்தம் **20** நபர்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர்.






## முக்கிய குறிப்பு

எதிர்வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற , தெளிவான புகைப்படங்களுடன் தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன் மாவட்ட தலைவர் வழியாக கீழுள்ள மின் முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்."

மின்னஞ்சல் முகவரி
ssssotnreporting@gmail.com